# சங்கீதப் புத்தகங்கள்
# ஓர் அறிமுகம்

| | |
|---|---|
| யோபு | 4 |
| சங்கீதம் | 10 |
| நீதிமொழிகள் | 14 |
| பிரசங்கி | 3 |
| உன்னதப்பாட்டு | 2 |






பரிசுத்த வேதாகமம் தேவன் நமக்குக் கொடுத்திருக்கும் ஆச்சரியமான ஓர் அன்பளிப்பாகும். தேவனுடைய வார்த்தையாகிய பரிசுத்த வேதாகமத்தை ஒவ்வொரு கிறிஸ்தவரும் கருத்தாக வாசிக்க வேண்டும். வேதாகம சத்தியங்களைத் தெளிவாக கற்று அறிந்திருக்க வேண்டும். வேதாகமத்தை வாசிக்கும்போது வசனங்களைத் தியானித்து தேவனுடைய சத்தத்தைக் கேட்கும் பழக்கம் இருக்க வேண்டும்.

பரிசுத்த வேதாகமம் 'பழைய ஏற்பாடு' 'புதிய ஏற்பாடு' என்ற இரண்டு பெரிய பிரிவுகளைக் கொண்டது. ஆண்டவராகிய இயேசு கிறிஸ்துவின் காலத்துக்கு முன்பாக எழுதப்பட்ட புத்தகங்கள் 'பழைய ஏற்பாடு' என்ற பிரிவில் உள்ளன . ஆண்டவராகிய இயேசு கிறிஸ்துவின் காலத்துக்குப் பின் எழுதப்பட்ட புத்தகங்கள் 'புதிய ஏற்பாடு' என்ற பிரிவில் அடங்கும்.

பொதுவாக பைபிளின் ஒரு பகுதியாகிய புதிய ஏற்பாட்டைத்தான் பலரும் அதிகமாக வாசிக்கிறார்கள். புதிய ஏற்பாட்டின் செய்தியைத் தெளிவாக விளங்கிக்கொள்ள வேண்டுமென்றால், பழைய ஏற்பாட்டின் புத்தகங்களைத் தொடர்ச்சியாகவும் கருத்தாகவும் வாசிக்க வேண்டும்.

பழைய ஏற்பாட்டிலுள்ள முப்பத்தொன்பது புத்தகங்களும் சரித்திரப் புத்தகங்கள், சங்கீதப் புத்தகங்கள், தீர்க்கதரிசனப் புத்தகங்கள் என்ற மூன்று முக்கியப் பிரிவுகளாகப் பிரிக்கப்படுகின்றன. இலக்கிய அமைப்பு, கருத்து, ஆகியவைகளின் அடிப்படையில் இந்தப் பிரிவுகள் அமைந்திருக்கின்றன.

நீங்கள் பழைய ஏற்பாட்டை ஒரு முறையாவது வரிசையாக தொடர்ச்சியாக வாசித்திருக்கிறீர்களா? இதுவரை அப்படி வாசித்திராவிட்டால் தயவுசெய்து ஒரு முறையாவது அந்த விதமாக வாசித்துப் பாருங்கள். நீங்கள் வேதாகமத்தின் ஒவ்வொரு புத்தகத்தின் செய்தியை எளிதாகவும், தெளிவாகவும் விளங்கிக் கொள்ள வேதாகமப் புத்தகங்களுக்கான அறிமுகக் குறிப்புகள் பெரிதும் உதவுகின்றன.

## சங்கீதப் புத்தகங்கள்

பரிசுத்த வேதாகமத்தின் முதல் 5 புத்தகங்களான பஞ்சாகமங்களை அடுத்துள்ள 12 புத்தகங்கள் 'சரித்திரப் புத்தகங்கள்' என்று அழைக்கப் படுகின்றன. 'சங்கீதப் புத்தகங்கள்' என்ற பிரிவு அதையடுத்துள்ளது, இப்பிரிவில் யோபு, சங்கீதம், நீதிமொழிகள், பிரசங்கி, உன்னதப் பாட்டு என்ற 5 புத்தகங்கள் அடங்கும்.

சங்கீதப் புத்தகங்கள் என்ற பிரிவில் உள்ள புத்தகங்களில் பெரும் பகுதி செய்யுள் நடையிலும், சில பகுதிகள் உரையாடல் நடையிலும் எழுதப்பட்டிருக்கின்றன.
இப்புத்தகங்களை வாசிக்கும் போது இவைகள் செய்யுள் நடையில் எழுதப்பட்டிருப்பதால் அதற்கேற்ற விளக்கம் தரும் வகையில் யோசிக்க வேண்டும். அந்த 5 புத்தகங்களும் அறிவைப் புகட்டும் நோக்கத்துடன் எழுதப்பட்டிருப்பதால் 'ஞான ஆகமங்கள்' என்றும் அழைக்கப் படுகின்றன.

**யோபு:**

இது மிகவும் பழமையான இலக்கியமாகும். ஆனால் ஆழமான கருத்துக்களைக் கொண்ட ஒரு புத்தகமாகும். தேவ பக்தியுள்ளவர் களுக்கும் பாடுகளும், உபத்திரவங்களும் உண்டு என்று இப்புத்தகம் விளக்குகிறது.

**சங்கீதப் புத்தகம்:**

வேதாகமத்திலேயே அதிகமான அதிகாரங்களைக் கொண்ட இப்புத்தகம் இஸ்ரவேல் மக்களுக்குப் பாமாலையாக அமைந்திருந்தது. மனிதனுடைய பலவித அனுபவங்களை இப்புத்தகம் விளக்குவதால் எல்லோரும் இப்புத்தகத்தை விரும்பிப் படிக்கிறார்கள்.

**நீதிமொழிகள்:**

மனித வாழ்க்கைக்கு நல்வழிகாட்டும் ஆலோசனைகள், எச்சரிப்புகள், தத்துவங்கள் நிறைந்த ஒரு புத்தகம் இதுவாகும்.

**பிரசங்கி :**

தேவன் ஒருவனுடைய வாழ்க்கையில் இடம் பெறாவிட்டால் மனித வாழ்க்கை எவ்வளவு வெறுமையானது என்பதை இப்புத்தகம் விளக்குகிறது.

**உன்னதப்பாட்டு:**

தேவனுக்கும் மனிதனுக்குமுள்ள ஆழமான அன்பின் உறவு திருமண உறவை விளக்கும் முறையில் இப்புத்தகத்தில் விளக்கப்பட்டுள்ளது.



| | |
|---|---|
| **யோபு** | **: துயரம்** |
| **சங்கீதம்** | **: பரவசம்** |
| **நீதிமொழிகள்:** | **ஞானம்** |
| **பிரசங்கி** | **: தத்துவம்** |
| **உன்னதப்பாட்டு:** | **நேசம்** |

பழைய ஏற்பாட்டின் புத்தக வரிசையில் 18 ஆவது புத்தகமாக இடம் பெற்றிருக்கிற இந்தப் புத்தகம் உரையாடல் நடையில் எழுதப்பட்ட ஒரு புத்தகமாகும்.

## இப்புத்தகத்தைப் பற்றி

மிகவும் பழமையான புத்தகம் என்ற தனிச்சிறப்பைப் பெற்றிருக்கும் இப்புத்தகம், தேவனை நேசிக்கும் பக்தனின் வாழ்வில் வரக்கூடிய துன்பங்களின் ஆழத்தை விவரிக்கிறது. தேவபக்தியுள்ளவனுக்கும் பாடுகள் உண்டா? என்று மக்கள் கேட்கிறார்கள். பாடுகள் இல்லாத தேவபக்தியுள்ள மனிதன் உண்டா என்ற கேள்விக்கு இப்புத்தகம் விளக்கம் கொடுக்கிறது.

## இந்தப் புத்தகத்தின் சம்பவங்கள் நிகழ்ந்த காலம்

யோபுவின் வாழ்க்கை வரலாற்றுச் சம்பவங்கள் ஆபிரகாம், ஈசாக்கு யாக்கோபு என்ற முற்பிதாக்களின் காலத்தில் நடைபெற்றவை என்று கணிக்கப்படுகிறது. யாத்திராகமம் புத்தகத்தில் குறிப்பிடப்பட்டிருக்கும் சம்பவங்களும், சட்டதிட்டங்களும் யோபின் புத்தகத்தில் காணப்பட வில்லை. எனவே யாத்திராகமம் எழுதப்படுவதற்கு முன்பே ஒருவேளை எழுதப்பட்டிருக்கலாம். கீழ்க்காணும் 3 குறிப்புகள் யோபின் காலத்தை நிர்ணயிக்கின்றவைகளாக இருக்கின்றன.

**1. யோபின் நீண்ட ஆயுசு நாட்கள்:** யோபு அவர் வாழ்க்கையில் நடை பெற்ற சம்பவங்களுக்குப் பின்னால் 140 ஆண்டுகள் வாழ்ந்தார்.அவருடைய ஆயுசு நாட்கள் ஒருவேளை 200 ஆண்டுகளாக இருந்திருக்கலாம். யோபின் ஆஸ்தி அல்லது உடமை, பொன், வெள்ளி, இவைகளினால் கணிக்கப்படாமல்அவருக்கு இருந்த கால்நடைச் செல்வங்களை வைத்து கணிக்கப்பட்டிருக்கிறது1:3, 42:12 வசனங்களைப் படித்துப் பாருங்கள்.

2. ஆபிரகாம், ஈசாக்கு, யாக்கோபு என்ற முற்பிதாக்களைப் போல தம் குடும்பத்திற்காகப் பலி செலுத்தும் ஆசாரிய ஊழியத்தைச் செய்தார்.1: 5

3. எலிப்பாசு என்பவன் ஏசாவின் மூத்த மகனின் வம்சத்தில் தோன்றியவன்.

## எழுதியவர்:

யார் என்று குறிப்பாகத் தெரியவில்லை.

## எழுதப்பட்ட காலம்:

இதையும் சரியாகக் கணிக்க முடிய வில்லை.

## முக்கியச் செய்தி

பைபிளில் ஒவ்வொரு புத்தகமும் குறிப்பிட்ட ஒரு செய்தியை மையமான முக்கிய செய்தியாகக் கொண்டு எழுதப்பட்டுள்ளது.யோபு புத்தகத்தின் செய்தியை ‘பரிசுத்தவானின் பாடுகள்’ என்ற தலைப்பில் ஆராய்ந்தால் செய்தி தெளிவாகும் .

மனித வாழ்க்கையில் சஞ்சலமும், துயரமும், இழப்பும், தவிப்பும், அங்கலாய்ப்பும் உண்டு. வேதனை, வியாகுலம், வருத்தங்கள் தவிர்க்கப்பட முடியாதவை. பொதுவாக தீயவைகளைச் செய்கிறவர்கள் தீமையை அனுபவிக்க வேண்டும். தீமையின் விளைவு துயரம் என்பது பொதுவான கருத்து. யோபுவிற்கு ஆறுதல் சொல்ல வந்த 3 நண்பர்கள் யோபுவினுடைய வாழ்க்கையில் ஏதாவது பாவம் இருந்திருக்கலாம் என்று குற்றப்படுத்தும் வகையில் பேசினார்கள். எனவே தான் அவர் இப்படிப்பட்ட துன்பங்களை அனுபவிக்க வேண்டியதாயிருந்தது என்ற அடிப்படையில் பேசினார்கள். அவர்கள் பேசியவை யோபுவிற்கு வேதனையாக இருந்ததை நாம் கவனிக்கலாம்.

நீதிமானுக்கு பாடுகள் வரலாம். நீதிமானுக்கு வரும் பாடுகள் உயரிய நோக்கத்திற்காக தேவனால் அனுமதிக்கப்பட்டவைகளாக இருக்கின்றன. ஆழமான ஆவிக்குரிய பண்புகளான மனமாற்றம், பொறுமை, பரிசுத்தத்தில் வளருதல் போன்ற வைகளை உருவாக்கவும் பரிசுத்தவான்கள் பாடுகளினூாடே நடத்தப்படலாம்.

ஓர் அறிமுகம் என்ற வரிசையில் எழுதப்பட்டிருக்கும் இந்தக் கட்டுரையில் பழைய ஏற்பாட்டிலுள்ள சங்கீதப் புத்தகங்களுக்கான அறிமுகக் குறிப்புகள் விளக்கப்பட்டிருக்கின்றன. பல வேத ஆராய்ச்சி நூல்களிலும், ஆராய்ச்சி வேதாகமங்களிலும் கொடுக்கப்பட்டிருக்கும் குறிப்புகள் இக்கட்டுரையில் தொகுத்துத் தரப் பட்டுள்ளன.

**முக்கிய குறிப்புகள், புள்ளி விபரங்கள்**

- தேவன் சர்வ வல்லவர். அதாவது எதையும் எந்த நேரத்திலும் எந்த வகையிலும் செய்யக்கூடிய பேராற்றல் கொண்டவர். சர்வ வல்லவர் என்ற வார்த்தை 30 தடவைகள் இப் புத்தகத்தில் வருகின்றது. யோபு 42 : 2 ஆம் வசனத்தைப் படித்துப் பாருங்கள்
- 1, 2, 42 அதிகாரங்களைத் தவிர மற்ற அதிகாரங்கள் தர்க்கங்கள் நிறைந்த உரையாடல்களாக அமைந்துள்ளன.
- யோபு என்ற வார்த்தைக்கு 2 பொருள்கள் கொடுக்கப்பட்டி ருக்கின்றன.
  1. துன்புறுத்தப்பட்டவன்
  2. திரும்பி வருதல், அல்லது மனந்திரும்புதல்

இந்த 2 பொருள்களுமே யோபின் புத்தகத்திலுள்ள செய்தியை விளக்குகின்றன. யோபு புடமிடப் பட்ட ஓர் பரிசுத்தவான்!

தேவனை நேசித்து பரிசுத்தமாய் வாழ்கிறவர்களுக்கும் பாடுகள் உண்டா? ஏன் அவர்களுக்கு பாடுகள் வருகின்றன? என்ற கேள்விகளுக்கு விளக்கங்களாக யோபின் புத்தகத்தில் ஆழ்ந்த இரகசியங்கள் எழுதப் பட்டிருக்கின்றன.

- யோபுவைப் பற்றி எசேக்கியேல் 14 :14, 20 யாக்கோபு 5 :11 வசனங்களிலும் படிக்கிறோம். யோபு பேசியவைகள் தான் இப்புத்தகத்தில் எழுதப்பட்டி ருக்கின்றன.

**முக்கிய கதா பாத்திரங்கள்**

தேவன், சாத்தான், யோபு, எலிப்பாசு, பில்தாத், சோப்பார், எலிகூ.

**முக்கிய அதிகாரம்:** 42

பெரியஅதிகாரம் 38 வசனங்கள் 41

சிறிய அதிகாரம் 25 வசனங்கள் 6

**திறவுகோல் வசனங்கள்:**

13 :15, 37: 23, 24

அவர் என்னைக் கொன்று போட்டாலும், அவர்மேல் நம்பிக்கையாயிருப்பேன்; ஆனாலும் என் வழிகளை அவருக்கு முன்பாக ரூபகாரம் பண்ணுவேன்.
யோபு 13:15

சர்வ வல்லவரை நாம் கண்டுபிடிக்கக் கூடாது; அவர் வல்லமையிலும் நியாயத்திலும் பெருத்தவர்; அவர் மகாநீதிபரர்;அவர் ஒடுக்கமாட்டார்.
யோபு 37:23

ஆகையால் மனுஷர் அவருக்குப் பயப்பட வேண்டும்; தங்கள் எண்ணத்தில் ஞானிகளாயிருக்கிற எவர்களையும் அவர் மதிக்கமாட்டார் என்றான்.
யோபு 37:24

**முக்கிய வார்த்தை:** சர்வ வல்லவர்.

ஆரம்பத்தில் யோபு பெரிய இழப்பை சந்திக்க நேரிட்டாலும் முடிவில்அவர் இரண்டு மடங்காக ஆசீர்வாதங்களைப் பெற்றுக் கொண்டதை கடைசி அதிகாரத்தில் கவனியுங்கள்

*7* எழுத்துக்களைக் கொண்ட மிகச் சிறிய வசனத்தை 36:1ல் கவனியுங்கள்.

பின்னும் எலிகூ.

**பகுப்பாய்வு**

| | |
|---|---|
| யோபின் வாழ்க்கையில் நடை பெற்றவைகள் | 1 ,2 |

**முதல் சுற்று உரையாடல்கள் அதிகாரங்கள்**

| | |
|---|---|
| யோபு சொன்னவை | 3 |
| எலிப்பாசு பேசியது | 4, 5 |
| யோபுவின் மறுமொழி | 6, 7 |
| பில்தாத் பேசியவை | 8 |
| யோபுவின் மறுமொழி | 9, 10 |
| சோப்பார் பேசியது | 11 |
| யோபுவின் மறுமொழி | 12 - 14 |

**இரண்டாம் சுற்று உரையாடல்கள்**

| | |
|---|---|
| எலிப்பாசு பேசியவை | 15 |
| யோபுவின் மறுமொழி | 16, 17 |
| பில்தாத் பேசியவை | 18 |
| யோபுவின் மறுமொழி | 19 |
| சோப்பார் பேசியவை | 20 |
| யோபுவின் மறுமொழி | 21 |

**மூன்றாம் சுற்று உரையாடல்கள்**

| | |
|---|---|
| எலிப்பாசு பேசியவை | 22 |
| யோபுவின் மறுமொழி | 23, 24 |
| பில்தாத் பேசியவை | 25 |
| யோபுவின் மறுமொழி | 26-27 |
| எலிகூ பேசியவை | 32- 37 |
| தேவன் பேசியவை | 38- 39 |
| தேவன் பேசியவை, யோபுவின் மறுமொழி | 40,41 |
| யோபு மனந்திரும்புதல், விண்ணப்பம் செய்தல் மீண்டும் ஆசீர்வதிக்கப்படுதல் | 42 |

**ஒவ்வொரு அதிகாரத்தின் உள்ளடக்கம்**

ஒவ்வொரு அதிகாரத்தின் செய்தியையும் குறிப்பாக நீங்கள் அறிந்து கொள்ளவும், எளிதாக விளங்கிக் கொள்ளவும், தெளிவாக உங்கள் நினைவில் வைத்துக் கொள்ளவும் பின்வரும் தலைப்புகள் பெரிதும் உதவும். இந்தத் தலைப்புகளை உங்கள் வேதாகமத்தின் ஒவ்வொரு அதிகாரத்தின் ஆரம்பத்திலும் எழுதி வைத்துக் கொள்ளுங்கள். அதை மனப்பாடமாக படித்துக் கொள்ளுங்கள். ஏன் இந்தத் தலைப்புகள் கொடுக்கப்பட்டிருக்கின்றன என்று யோசித்துப் பாருங்கள்.

1. யோபுவின் பக்தி, செல்வம், குடும்பம், யோபுவிற்கு வந்த இழப்புகள்.
2. தேவனின் அனுமதி பெற்ற சாத்தான் யோபை துன்புறுத்துதல் அவர் அனுபவித்த சரீர வேதனை.
3. பிறந்த நாளை சபித்து யோபு பேசுதல்.
4. எலிப்பாசு பேசுதல்: களங்கமற்றவர்கள் துன்பப்படுவதில்லை. இரவில் கண்ட தரிசனம்.
5. யோபுவிற்கு சொன்ன அறிவுரையும் ஆலோசனையும்.
6. யோபுவின் ஆழ்ந்த துயரம் , இரக்கம் கிடைக்க வேண்டுதல்.
7. தன் வாழ்நாட்களைப் பற்றி யோபு சொன்னவை,யோபு கேட்ட கேள்விகள்.
8. பில்தாத்: முன்னோர்களின் பாரம்பரியங்கள்.
9. யோபு தனக்கு வந்திருக்கும் துன்பங்களைப் பற்றி தர்க்கித்தல்.
10. துயரத்தோடு யோபு புலம்புதல்.
11. சோப்பார்: யோபுவின் பரிசுத்தத்தைக் குறித்து கேள்வி கேட்டல்.
12. துன்மார்க்கர் உடனே தண்டிக்கப் படவில்லையே என்று யோபு முறையிடுதல்.
13. யோபு முறையிடுதல்:
14. யோபு பேசுதல்: மனிதனுக்கு வரும் பாடுகள்.

15. எலிப்பாஸ் இரண்டாம் முறை பேசுதல்: யோபுவை கடிந்துரைத்தல் துன்மார்க்கன் தழைப்பதில்லை.

16. யோபு தன் நண்பர்களை கடிந்து கொள்ளுதல்.

17. யோபு பேசியவை.

18. பில்தாத் இரண்டாம் முறை சொன்னவை: துன்மார்க்கருக்கு வரும் முடிவு.

19. தனக்கு வந்த பாடுகளைப் பற்றி யோபு புலம்புதல் உயிர்த்தெழுதல் மேல் நம்பிக்கை.

20. சோப்பார் இரண்டாம் முறை பேசுதல். துன்மார்க்கருக்கு வரும் முடிவு.

21. யோபு பேசுதல்: சர்வவல்ல தேவன் துன்மார்க்கருக்கு கொடுக்கும் முடிவு.

22. எலிப்பாசு கூறியவை.

23. யோபுவின் பதில்: நம்பிக்கை

24. துன்மார்க்கரின் துணிகரத்தை தேவன் பொருட்படுத்தவில்லையே என்று யோபு அங்கலாய்த்தல்.

25. பில்தாத் கூறியவை.

26. பில்தாத்துக்கு யோபு கொடுத்த மறுமொழி.

27. யோபு தொடர்ந்து பேசியவை: தன்னுடைய நீதியைச் சுட்டிக் காட்டி யோபு சொன்னவை.

28. ஞானத்தைப் பற்றி யோபு சொன்னவை.

29. யோபின் மற்றும் ஓர் பிரசங்கம். கடந்த காலத்தை நினைவு கூறுதல்.

30. துன்பத்தை அனுபவிக்கிறதைக் குறித்துப் புலம்புதல்.

31. தன்னிடத்தில் குற்றம் இல்லையென்று விவரித்துச் சொல்லுதல், வழக்காடுதல்.

32. எலிகூ குறுக்கிட்டுப் பேசுதல்.

33. எலிகூ பேசியவை யோபின் முறையீட்டை சுட்டிக்காட்டி எலிகூ பதில் கொடுத்தல்.

34. 2 ஆவது முறையாக யோபு முறையிடுதலுக்கு எலிகூ பதில் கொடுத்தல்.

35. 3 ஆவது முறையாக எலிகூ தர்க்கித்தல்.

36. தேவன் யோபுவை சிட்சிக்கிறார் என்று எலிகூ முடிவாக கூறுதல்.

37. தேவன் பெரியவர் என்று எலிகூ கூறுதல்.

38. தேவன் யோபுவை கடிந்துகொள்ளுதல்.

39. தேவன் யோபுவை கேள்வி கேட்டல்

40. யோபு தேவனுக்கு பதில் சொல்லுதல். 2 ஆவது முறையாக தேவன் யோபுவிற்கு சவால் விடுதல்.

41. லிவியாதானை ஒப்பிட்டுப் பேசுதல்.

42. யோபு பாவத்திற்காக மனம் வருந்துதல் நண்பர்களுக்காக மன்றாடுதல், திரும்பப் பெற்ற ஆசீர்வாதம்.

**இப்புத்தகத்தை வாசிப்பதற்கான ஆலோசனை**

42 அதிகாரங்களைக் கொண்ட இப்புத்தகத்தில் 1070 வசனங்கள் இருக்கின்றன. தமிழ் வேதாகமத்தில் 37பக்கங்களில் அடங்கியுள்ள இப்புத்தகத்தை தொடர்ச்சியாக வாய்விட்டு வாசிக்க 2 மணி 30 நிமிடங்கள் ஆகிறது. அப்படி ஒரு முறை வாசித்துப் பாருங்கள்.

**தேவனைத் துதியுங்கள்!**

யோபுவின் புத்தகத்திலிருந்து தேவனைத் துதிப்பதற்கு தெரிந்தெடுக்கப்பட்ட வசனங்கள்.

5:9 5:11, 7:20 (மு) 9 : 4 (மு)
11:7(மு) 12: 10,12: 13, 13 : 16 (மு)
19 :25 22 :12 (மு) 32 : 22 (பி)
33 : 4(மு) 33: 12(பி) 33 : 14
34 : 11 34 :17 (பி) 34 : 21
35 :11 36 : 22 (பி) 36 : 26
37 : 5 37 :14 (பி) 37 : 16(பி)
37 :23 42: 2

யோபு புத்தகத்தை 13 நாட்களில் வாசித்து முடிக்க ஓர் அட்டவணை

| நாள் | அதிகாரங்கள் |
|---|---|
| 1 | 1-3 |
| 2 | 4-7 |
| 3 | 8-10 |
| 4 | 11-14 |
| 5 | 15-17 |
| 6 | 18-21 |
| 7 | 22-24 |
| 8 | 25-28 |
| 9 | 29-31 |
| 10 | 32-34 |
| 11 | 35-37 |
| 12 | 38-40 |
| 13 | 41-42 |


Dr. Selwyn 89030 11350, Email. selwynde@gmail.com

பழைய ஏற்பாட்டுப் புத்தக வரிசையில் 19 ஆவது புத்தகமாக அமைந்திருக்கும் இப்புத்தகம் செய்யுள் நடையில் எழுதப்பட்ட ஒரு புத்தகமாகும். எல்லோராலும் விரும்பி வாசிக்கப் படும் இனிமையான இப்புத்தகத்தில் காணப்படும் ஒவ்வொரு அதிகாரமும் ஒரு பாடலாகும். நமது ஆலயங்களிலும், ஆராதனைக் கூட்டங்களிலும் தேவனைத் துதித்துப் போற்றுவதற்காக பாடல் புத்தகத்தைப் பயன்படுத்துவது போல யூத மக்கள் அவர்களது தேவாலயத்து வழிபாட்டு முறைகளில் இசையமைத்துப் பாடுவதற்காக சங்கீதப் புத்தகத்தைப் பயன்படுத்தினர். யூதர்களின் பக்திப் பாடல்கள் நிறைந்த இப்பாமாலையில் ஒவ்வொரு பாட்டிற்கும் ஒரு குறிப்பிட்ட ராகம், தாளம், அப்பாடல் இயற்றப்பட்ட பின்னணி போன்ற குறிப்புகள் எழுதப்பட்டிருக்கின்றன.

## இப்புத்தகத்தைப் பற்றி

'சங்கீதம்' என்ற வார்த்தையின் பொருள் 'துதி' என்பதாகும். தேவனைத் துதித்துப் போற்றிப் புகழ்ந்து பாடும் கருத்தான பாடல்கள் பல இப்புத்தகத்தில் காணப்படுகின்றன. பழைய ஏற்பாட்டின் புத்தகங்களில் இப்புத்தகத்தை மக்கள் மிகவும் அதிகமாக விரும்பி வாசிக்கிறார்கள் என்றால் அதற்கு காரணம் உண்டு.

தேவனைப் பற்றி அதிகமாக இப்புத்தகம் எடுத்துச் சொல்கிறது. சாதாரண மனிதனின் வாழ்க்கையில் அவனை எதிர்கொள்ளும் பலவிதமான அனுபவங்கள், சூழ்நிலைகள், தோல்விகள், வெற்றிகள் காரணமாக எழும்பும் உணர்ச்சிகளும், உள்ளக் குமுறல்களும், கருத்துக்களும் அப்படியே சங்கீதப் புத்தகத்தில் எழுதப்பட்டிருக்கின்றன.

கருத்தாய் இப்புத்தகத்தை வாசிப்போமென்றால் இன்றைய உலகில் நாம் எதிர்கொள்ளும் நம்முடைய தனிப்பட்ட அனுபவங்கள் அப்படியே எழுதப்பட்டிருப்பதை நாம் காணக்கூடும்.

சங்கீதங்களின் இராகமும், அவைகளின் இசை மீட்டப்படும் இசைக் கருவிகளின் பெயர்களும் சில இடங்களில் சொல்லப்பட்டி ருக்கின்றன. எந்த சூழ்நிலையில் சங்கீதம் இயற்றப்பட்டது என்பதையும் சில சங்கீதங்களின் ஆரம்பத்தில் நீங்கள் கவனிக்கலாம்.

இந்தப் புத்தகம் ஒரு பக்தி நூலாகும். தேவனை நேசிக்கும் ஒரு பக்தன் தனக்கும் அவருக்குமுள்ள நெருக்கமான உறவை பல விதங்களில் வெவ்வேறு வார்த்தைகளைக் கொண்டு வெளிப்படுத்துவதை, விவரிப்பதை இப்புத்தகத்தில் பார்க்கலாம். நமது பக்தி உணர்வை, பரவசத்தைத் தூண்ட, தெளிவு படுத்த சங்கீதப் புத்தகம் பெருமளவில் உதவுகிறது.

ஒவ்வொரு சங்கீதமும் எழுதப் பட்டதற்கு காரணமான ஒரு நிகழ்ச்சியோ, அனுபவமோ இருந்தது. சில சங்கீதங்களின் தலைப்பில் பின்னணி கொடுக்கப்பட்டிருப்பதைக் கவனியுங்கள். அந்தக் கண்ணோட்டத் தோடு அந்த சங்கீதத்தை படிப்பீர் களென்றால் கருத்துக்களை நன்றாக புரிந்துகொள்ள முடியும். உதாரணமாக *சங்கீதம் 51*ஐ எடுத்துப் படியுங்கள். குறிப்பிட்ட வாத்தியங்களில் வாசித்துப் பாடப்படுவதற்கான சங்கீதங்களும் காணப்படுகின்றன. உதாரணமாக சங்கீதம் 4,6 நெகினோத்தென்னும் வாத்தியத்தில் வாசித்துப் பாடும் படியாக உள்ளன. சில சங்கீதங்கள் குறிப்பிட்ட ராகத்தில் பாடப் படுவதற்காகவும் எழுதப்பட்டிருந்தன.

உதாரணமாக சங்கீதங்கள் 58, 59 மிக்தாம் என்னும் இராகத்தில் பாடப்பட்டவை. சில சங்கீதங்களின் ஆரம்பத்தில் 'ராகத்தலைவன்' என்ற வார்த்தையை நீங்கள் கவனிக்கலாம். பாடல்கள் இசையமைத்து பாட்டுக் கூட்டங்களை நடத்திய இசைக் கவிஞன் அவ்வாறு அழைக்கப்பட்டான். உதாரணமாக சங்கீதம் 62.

பரிசுத்த வேதாகமத்திலேயே மிகவும் பெரிய அல்லது நீளமான புத்தகம் சங்கீதப் புத்தகமாகும். வேதாகமத்தின் மிகப்பெரிய நீளமான அதிகாரம்119 (176 வசனங்கள்).மிகச் சிறிய அதிகாரம் 117 (2வசனங்கள்). வேதாகமத்தின் மையமான வசனம் 118:8. இவை எல்லாம் சங்கீதப் புத்தகத்தில் தான் இடம் பெற்றி ருக்கின்றன.

### எழுதியவர்கள்

150 சங்கீதங்களில் 100 சங்கீதங்களை எழுதியவர்களின் பெயர்கள் கொடுக்கப்பட்டிருக்கின்றன.

தாவீது அரசன் 70 க்கும் அதிகமான சங்கீதங்களையும், ஆசாப் 12, கோராகின் புத்திரர் 11, சாலொமோன் 2, மோசே 1, ஏமான்1, ஈத்தான் 1 சங்கீதங்களை எழுதினார்கள். 50 சங்கீதங்கள் யாரால் எழுதப்பட்டன என்று பெயர் கொடுக்கப்படவில்லை. இப்படிப் பலராலும் எழுதப்பட்ட சங்கீதங்களின் தொகுப்பு தான் சங்கீதப் புத்தகமாகும் .

### எழுதப்பட்ட காலம்

கிறிஸ்துவுக்கு முன்10 நூற்றாண்டுக்கு முன்னர் அதாவது கி.மு. 1000 இல் எழுதப்பட்ட பல சங்கீதங்கள் உண்டு. மோசே காலத்திலிருந்து சிறையிருப்பிற்கு பின்னர் உள்ள காலம் வரைக்கும் சில நூற்றாண்டுகள் இடைக்காலத்தில் எழுதப்பட்ட சங்கீதங்கள் இப்புத்தகத்தில் இடம் பெற்றிருக்கின்றன.

### முக்கிய அதிகாரங்கள்

23 கர்த்தர் என் மேய்ப்பராயிருக்கிறார்.
51 பாவ அறிக்கையின் ஜெபம்
100 துதியின் சங்கீதம்.
119 வேதவசனமாகிய தேவனுடைய வார்த்தையின் மகிமை.
145 மகிமையின் தேவனை துதித்துப் போற்றுங்கள்.

### முக்கிய வசனங்கள்

19:14; 29:2 145:21

### முக்கிய வார்த்தைகள்

துதியுங்கள், அல்லேலுாயா

அல்லேலுாயா என்ற வார்த்தையின் பொருள்'தேவனைத் துதி ' என்பதாகும்.

### சேலா:

இசையமைப்பில் பயன்படுத்தப்படும் இந்த வார்த்தையின் பொருள் இடைவேளை, அமைதி என்பதாகும். ஒரு பாடலைப் பாடும்போது ஒரு குறிப்பிட்ட வரியைப் பாடினபின் அதன் கருத்தை சற்று கவனமாக யோசித்துப் பார்க்க எடுத்துக் கொள்ளும் இடைவேளை 'சேலா' என்று அழைக்கப்படுகிறது. சங்கீதப் புத்தகத்தில் இந்த வார்த்தை 71 தடவை வருகிறது.

119 ஆம் சங்கீதத்தில் வரும் தலைப்புகள் (உதாரணமாக ஆலெப், பேத், கிமெல்....) அகர வரிசைப்படி அமைந்த எபிரேய எழுத்துக்களாகும்.

### பல்வேறு வகையான சங்கீதங்கள்

சங்கீதப் புத்தகத்தில் பாதி சங்கீதங்கள் நெருக்கத்திலும், இக்கட்டுகளிலும், வேதனையோடு இருக்கையில் நம்பிக்கையோடும் எதிர்பார்ப்போடும் ஏறெடுக்கப்பட்ட ஜெபங்களாகும். 40 சங்கீதங்கள் தேவனை போற்றிப் புகழ்ந்து பாடும் துதிப்பாடல்களாகும். பல்வேறு வகையான தலைப்புகளில் எழுதப்பட்ட சங்கீதங்களின் பட்டியலை கவனமாக படித்துப் பாருங்கள்.

- ❖ இராஜரீக சங்கீதங்கள்
  *2, 21, 45, 72, 110, 132*
- ❖ பாவத்திற்காக மனம் வருந்தி ஜெபித்தல்
  *32, 38, 51*
- ❖ சத்துருக்களுக்கு நீதி சரிக்கட்ட வேண்டுதல்
  *35, 55, 58, 69, 101, 137*
- ❖ சரித்திர சம்பந்தப்பட்ட சங்கீதங்கள்
  *78, 81, 105, 106, 126.*
- ❖ தேவனுடைய வார்த்தையின் மேன்மை
  *19, 119*
- ❖ மேசியாவின் சங்கீதங்கள்( ஆண்டவராகிய இயேசு கிறிஸ்துவைப் பற்றி சொல்லப்பட்டிருக்கிறது).
  *2, 8, 16, 22, 40, 41, 45, 68, 69, 89, 102, 109, 110, 118.*
- ❖ தீர்க்கதரிசன சங்கீதங்கள்
  *2,16, 22, 40, 45, 68, 69, 72, 97,110,118.*
- ❖ அல்லேலூயா சங்கீதங்கள்
  *106, 111, 112, 113, 117, 125, 146, 147, 149, 150.*
- ❖ ஆரோகண சங்கீதங்கள்
  *120 - 134*

எருசலேம் புனித ஸ்தலத்திற்கு யூதப்பண்டிகை காலங்களில் பாத யாத்திரை செய்த யாத்ரீகர்கள் மலைப்படிக் கட்டுகளில் ஏறிச் செல்லும்போது பாடும் பக்திப் பாடல்கள்**'ஆரோகண சங்கீதங்கள்'** என்று அழைக்கப்பட்டன.

## பகுப்பாய்வு:

சங்கீதப் புத்தகம் ஐந்து பாகங்கள் அல்லது பிரிவுகளாக காணப்படுகின்றது. ஒவ்வொரு பகுதியின் முடிவிலும் ஸ்தோத்திர வாழ்த்தோடு ஆமென், ஆமென் என்ற வார்த்தைகள் வருவதைப் பார்க்கலாம். ஒவ்வொரு பிரிவிலுமுள்ள கடைசி சங்கீதத்தின் இரண்டு வசனங்களை எடுத்துப் படியுங்கள்.

இந்த ஒவ்வொரு பாகமும் ஒரு புத்தகமாகும். சங்கீதப் புத்தகம் இந்த 5 புத்தகங்களைக் கொண்ட ஒரு புத்தகமாகும். இந்த 5 புத்தகங்களும் பழைய ஏற்பாட்டில் 'பஞ்சாகமங்கள்' என்று அழைக்கப்படும்.வேதாகமத்தின் முதல் 5 புத்தகங்கள் போல் காணப் படுகின்றன.

| | | | | |
|---|---|---|---|---|
| 1- 41 | 42- 72 | 73- 89 | 90-106 | 107-150 |

| புத்தகம் | சங்கீதங்கள் | எழுதியவர் | தலைப்பு | பொருத்தமான புத்தகம் |
|---|---|---|---|---|
| *1* | *1- 41* | தாவீது | படைப்பு | ஆதியாகமம் |
| *2* | *42- 72* | தாவீதும் கோராகும் | மீட்பு | யாத்திராகமம் |
| *3* | *73 - 89* | ஆசாப் | பரிசுத்தம் | லேவியராகமம் |
| *4* | *90 - 106* | மற்றவர்கள் | அலைந்து திரிதல் | எண்ணாகமம் |
| *5* | *107 -150* | தாவீதும் மற்றவர்களும் | தேவனைப் போற்றுதல் | உபாகமம் |

## இப்புத்தகத்தை வாசிக்கும் முறை

சங்கீதப் புத்தகத்தை பொதுவாக யாவரும் அதிகமாக வாசிக்க விரும்புவார்கள். ஏதாவது ஒரு சங்கீதத்தை எடுத்து அதிலிருந்து தொடர்ச்சியாக வாசிப்பவர்கள் உண்டு. மனதிற்கு ஆறுதல் தரும் ஒரு சில வசனங்களை வாசித்து விட்டு தொடர்ந்து வாசிப்பவர்களும் உண்டு. பரிசுத்த வேதாகமத்தின் புத்தகங்களை வரிசையாக வாசிக்கும் போது சங்கீதப் புத்தகத்தை வாசிக்கலாம்.சங்கீதம் 1லிருந்து தொடர்ச்சியாக வாசிப்பது நலம் 2461 வசனங்களைக் கொண்ட 150 சங்கீதங்கள் தமிழ் வேதாகமத்தில் சுமார் 92 பக்கங்களில் கொடுக்கப் பட்டிருக்கின்றன. ஒவ்வொரு சங்கீதத்திலும் உள்ள வசனங்களின் எண்ணிக்கை வேறுபட்டிருக்கிறது. ஒரு நாளைக்கு 5 சங்கீதங்கள் வாசித்தால் 30 நாட்களுக்குள் வாசித்து முடித்துவிடலாம்.

அளவில் சிறிய சங்கீதமாக இருந்தால் அதிகமான சங்கீதங்கள் வாசிக்கலாம். ஒவ்வொரு சங்கீதத்தையும் வாசிக்கும் போது அந்த சங்கீதத்துக்கான பின்னணியையும் தலைப்பையும் கவனித்து வாசிப்பது அவசியம். சங்கீதங்களை வாய்விட்டு கருத்துடன் உணர்ச்சியோடு வாசித்தால் அது எளிதில் நம்மை பரவசமூட்டும். வேதாகமத்தில் மற்ற புத்தகங்களை ஒவ்வொருநாளும் வாசித்தாலும் அதோடு கூட 2அல்லது 3 சங்கீதங்களை சேர்த்து வாசியுங்கள். துதியின் சங்கீதங்களை அடிக்கடி வாசித்து தேவனைத் துதியுங்கள் .

நீங்கள் ஒரு சங்கீதத்தை பயனுள்ள முறையில் வாசிப்பதற்கு 15 நிமிடங்களாவது செலவிட வேண்டும். கீழே கொடுக்கப்பட்டிருக்கும் ஆலோசனைகளின்படி வாசியுங்கள்.

1. **ஆயத்தம்** : அமைதியாக அமர்ந்திருந்து மனதை ஒரு நிலைப்படுத்தி ஒரு நிமிடமாவது ஜெப நிலையில் காத்திருங்கள்.
2. சங்கீதத்தை மனதிற்குள் ஒரு முறை வாசிக்கவும்.
3. வாய்விட்டு கவனமாக ஒரு முறை வாசியுங்கள். அப்படி வாசிக்கும் போது உங்கள் உள்ளத்தைத் தொடக் கூடிய ஒரு வசனத்தை கண்டுபிடிக்க வேண்டும் என்ற எதிர்பார்ப்போடு வாசியுங்கள். அப்படி கண்டுபிடித்து விட்டால் அந்த வசனத்தின் எண்ணைச் சுற்றிலும் வட்டமிட்டுக் கொள்ளுங்கள். கண்டுபிடிக்கவில்லையென்றால் மீண்டும் ஒன்று அல்லது இரண்டு முறை வாசித்துக் கண்டுபிடியுங்கள்.
4. ஒவ்வொரு சங்கீதத்திற்கும் கொடுக்கப்பட்டிருக்கும் தலைப்பை சற்று பாருங்கள். ஏன் அந்தத் தலைப்பு கொடுக்கப்பட்டிருக்கிறதென்று கண்டறிய முயற்சி செய்யுங்கள்.
5. ஒரு நிமிடம் அமைதியாக காத்திருங்கள். நீங்கள் வாசித்த சங்கீதத்தில் ஒரு வார்த்தையையோ, வாக்கியத்தையோ, வசனத்தையோ நினைவுபடுத்திப் பார்க்க முயற்சி செய்யுங்கள்.
6. வேகமாக சங்கீதத்தை ஓரிருமுறை வாசியுங்கள்.
7. இந்த சங்கீதத்தில் தேவனைப்பற்றி என்னசொல்லப்பட்டிருக்கிறது என்று கண்டுபிடியுங்கள்.
8. இந்த சங்கீதத்தில் உங்களுக்கு விளங்காததைக் குறித்துக் கொண்டு அதைப்பற்றி தெரிந்தவர்களிடம் விளக்கம் கேளுங்கள்.

### ஒவ்வொரு சங்கீதத்தின் உள்ளடக்கம்

ஒவ்வொரு சங்கீதத்தின் உள்ளடக்கத்தை விளக்கும் தலைப்புகள் கீழே எழுதப்பட்டிருக்கின்றன. தலைப்புகளை நன்றாக கவனித்து சங்கீதத்தை வாசிப்பது மிகவும் அவசியம். ஒவ்வொரு சங்கீதத்தின் தலைப்பையும் அந்தந்த சங்கீதத்தின் ஆரம்பத்தில் உங்கள் பைபிளில் எழுதிக் கொள்ளுங்கள். அந்தந்தத் தலைப்பு ஏன் கொடுக்கப் பட்டிருக்கிறதென்று யோசித்துப் பாருங்கள்.

1. நீதிமான்களுக்கும், துன்மார்க் கருக்கும் உள்ள வேற்றுமை.
2. கர்த்தரால் அபிஷேகம் பண்ணப் பட்ட ராஜாவின் ஆளுகை.
3. காலை ஜெபம் : கர்த்தர் மேல் நம்பிக்கை.
4. மாலை ஜெபம் : சந்தோஷமும், சமாதானமும்.
5. சத்துருக்களிடமிருந்து பாதுகாக்க செய்யும் ஜெபம்.
6. துன்பத்தில் இரக்கத்திற்காக மன்றாடுதல்.

7. துன்மார்க்கருக்கு நீதிசரிக்கட்ட ஜெபித்தல்.
8. தேவனின் மாட்சிமையும், மனுஷரின் மேன்மையும்
9. தேவனின் நீதியுள்ள நியாயத் தீர்ப்புகள்.
10. துன்மார்க்கர் மேல் தேவனுடைய நியாயத்தீர்ப்புகள் வர ஜெபித்தல்.
11. கர்த்தர் நீதிமான்களுக்கு அடைக்கலம்.
12. இரண்டகம் பண்ணுகிறவர்களுக்கு விரோதமாய் நின்று உதவி புரிய வேண்டுதல்.
13. உபத்திரவத்தில் மன்றாட்டு.
14. மனுஷரின் மதிகேடும் அக்கிரமமும்.
15. கர்த்தரின் பரிசுத்த பர்வதத்தில் வாசம்பண்ணுவோர்.
16. தேவன் காத்தருள ஜெபம், உயிர்த்தெழுதலில் நம்பிக்கை.
17. நீதிமான் செய்யும் உருக்கமான வேண்டுதல்.
18. கர்த்தர் அருளும் வெற்றிக்காக, விடுதலைக்காக ஸ்தோத்திரம்.
19. இயற்கையில் விளங்கும் தேவ மகிமை, தேவனுடைய நியாயப்பிரமாணம்.
20. வெற்றிக்காக ஏறெடுக்கப்படும் ஜெபம்.
21. வெற்றிக்காக துதி செலுத்துதல்.
22. துன்பத்தில் அபயமும், துதியின் பாடலும்.
23. கர்த்தர் என் மேய்ப்பராய் இருக்கிறார்.
24. சிருஷ்டி கர்த்தாவும், அவரது ஆலயமும்.
25. பாதுகாப்புக்காகவும் பாவ மன்னிப்புக்காகவும் ஜெபம்.
26. நேர்மையான வாழ்க்கையைப் பற்றிய அறிக்கை.
27. கர்த்தர் மேல் வைக்கும் பயமில்லாத நம்பிக்கை.
28. சரிக்கட்டுதலுக்காக விண்ணப்பம். மகிழ்ந்து துதித்தல்.
29. கர்த்தருடைய சத்தம்.
30. மரணத்திலிருந்து விடுதலை கிடைத்ததற்காக துதி.
31. துன்பத்தில் கர்த்தரை நம்புதல்.
32. பாவம் மன்னிக்கப்படுவதின் பாக்கியம்.
33. சிருஷ்டிகரும் பாதுகாக்கிறவருமான தேவனுக்குத் துதி.
34. தமக்குச் சொந்தமானவர்களைப் பற்றி தேவனுக்கு இருக்கும் கரிசனை.
35. கொடுமை செய்யும் சத்துருக்களுக்கு நீதி சரிக்கட்ட ஜெபித்தல்.
36. பொல்லாதவர்களின் துணிகரமும், தேவனின் உருக்கமும் இரக்கமும்.
37. கர்த்தர் தம்மை நம்புகிறவர்களைப் பாதுகாக்கிறார். துன்மார்க்கரின் அழிவு.
38. பாவத்தின் பாரத்தினால் தவிக்கும் ஒருவரின் அங்கலாய்ப்பு.
39. மனித வாழ்க்கையின் அநித்தியமும் மாயையும்.
40. தேவன் பேரில் நம்பிக்கை. அவரது சித்தத்தை செய்வதில் மகிழ்ச்சி, தீவிரமாய் உதவி கேட்டு ஜெபம்.
41. வியாதிப்படுக்கையிலிருப்பவன் சத்துருக்கள் மேல் பழிவாங்க ஜெபித்தல்.
42. துரத்தப்பட்டுப் பல துன்பங்கள் மத்தியிலிருக்கையில் தேவன் மேல் தாகம்.
43. தேவாலயத்திற்குத் திரும்ப வருவதான நிச்சயத்துடன் செய்த ஜெபம்.
44. உபத்திரவத்திலிருக்கையில் கடந்த விடுதலைகளை மனதில் சிந்தித்தல்.
45. ராஜ கலியாணத்தைப் பற்றிய கீதம்.
46. தேவன் தமது மக்களின்அடைக்கலம்.

47. சகல மனிதரே தேவனே பூமியின் ராஜா! துதியுங்கள், களிகூருங்கள்
48. சீயோனின் அழகும், அதின் பலமும்.
49. ஐசுவரியம் எவரையும் மரணத்திலிருந்து இரட்சிக்காது.
50. பலிகளைக் கொண்டல்ல நம் நடத்தையைக் கொண்டு தான் கடவுள் நம்மை நியாயம் தீர்க்கிறார்.
51. பாவத்திற்காக மனஸ்தாபப்படும் ஒரு பாவியின் மன்றாட்டு.
52. மேட்டிமையான துன்மார்க்கம் நீக்கப்பட வேண்டும்.
53. மனுஷரின் துன்மார்க்கமும், மதிகேடும்.
54. கொடிய சத்துருக்களினின்று விடுவிக்கப்பட வேண்டும்.
55. கொடியவரின் கையினின்று தப்புவிக்கப்பட்டு, அவர்கள் நிர்மூலமாகச் செய்யும் ஜெபம்.
56. கபட்டு நெஞ்சமுள்ளவர்களுக்கு விரோதமாய்க் காத்துக்கொள்ளச் செய்யும் ஜெபம்.
57. தேவ பாதுகாப்பின் மேல் நம்பிக்கை வைக்கும் ஜெபம்.
58. பொல்லாதவர்கள் மேல் பழி வாங்கும் ஜெபம்.
59. இறுமாப்புடைய சத்துருக்களுக்கு விரோதமாய்ச் செய்யும் ஜெபம்.
60. யுத்தத்தில் தோல்வியடைந்ததினிமித்தம் புலம்பி உதவி கோரி மன்றாடல்.
61. தேவனுடைய பாதுகாப்பில் நம்பிக்கை.
62. கொடுமைக்குத் தப்ப தேவனில் அடைக்கலம் புகுதல்.
63. தவனமுள்ள ஆத்துமாவைக் கர்த்தர் திருப்தியாக்குகிறார்.
64. இரகசியமான சத்துருக்களுக்காகச் செய்யும் ஜெபம்.
65. பூமியைச் செழிப்பாக்குகிற கர்த்தருக்கு துதி.
66. கர்த்தரின் அதிசய செயல்களுக்காக அவரைத் துதித்தல்.
67. எல்லா ஜாதிகளும் கடவுளைத் துதிக்க பெலப்படுதல்.
68. தேவன் ஜெய கம்பீரத்தோடே எழுந்தருள்வதைப் பற்றிய ஓர் பாட்டு.
69. விடுதலை அளிக்கவும் பழிவாங்கவும் செய்த ஜெபம்.
70. தேவன் தீவிரமாய் உதவி செய்ய ஜெபித்தல்.
71. வயது முதிர்ந்த ஒரு மனிதனின் ஜெபமும், துதியும்.
72. நீதியுள்ள ராஜாவின் ஆளுகை.
73. துன்மார்க்கரின் செல்வாக்கு: அவர்கள் முடிவுக்கும், நீதிமான்களின் முடிவுக்குமுள்ள வேற்றுமை.
74. சத்துரு தேசத்தைப் பாழாக்கிப் போட்டது. கர்த்தர் தமது ஜனங்களை விடுவிக்க வேண்டும்.
75. கர்த்தரின் நீதியுள்ள தீர்ப்பு.
76. சர்வ வல்ல தேவன் பயங்கரமும் மகத்துவமுமானவர்.
77. துயரத்தில் தேவனை நினைப்பதினால் கிடைக்கும் ஆறுதல்.
78. தேவன் தம்முடைய மக்களுக்கு கொடுத்த பிரமாணம்.
79. பரிசுத்த ஸ்தலம் பரிசுத்தக் குலைச்சலானது, தேவனின் சகாயத்திற்காக வேண்டுதல்.
80. தேவனுடைய இரக்கத்திற்காக இஸ்ரவேலின் வேண்டுதல்.
81. தமது மக்கள் உண்மையற்றிருந்தாலும் அவர்கள் மீது தேவனுக்கிருந்த அனுதாபம்.
82. அநீதியுள்ள தலைவர்கள் கடிந்து கொள்ளப்படுதல்.

83. இஸ்ரவேலரின் எதிரிகளை தேவன் அழிக்கும்படி வேண்டுதல்.

84. தேவ வாசஸ்தலத்தில் தங்க வேண்டும் என்ற வாஞ்சை.

85. தேவனுடைய இரக்கம்: எழுப்புதலுக்கான ஜெபம்.

86. உபத்திரவத்திலிருக்கும் ஒரு பக்தன் உதவிக்காகவும், இரக்கத்திற்காகவும் வேண்டுதல்.

87. தேவனுடைய மகிமையான நகரமாகிய சீயோனைப் புகழ்ந்து பாடுதல்.

88. வேதனை அனுபவிக்கும் ஒருவரது உருக்கமான வேண்டுதல்.

89. கர்த்தர் தாவீதோடு செய்த உடன்படிக்கை அதை நிறைவேற்ற ஜெபம்.

90. நித்திய தேவனே மனிதனின் அடைக்கலம்.

91. சர்வவல்ல தேவன் அருளும் அற்புதமான பாதுகாப்பு.

92. தேவனைத் துதிப்பது மகிமையானது.

93. தேவன் மகத்துவமுள்ளவர்.

94. பழிவாங்குதலும், நீதியை சரிக் கட்டுதலும் தேவனுக்கே உரியது.

95. தேவனை ஆராதிக்க அழைப்பு.

96. எல்லோரும் தேவனுடைய மகிமையைப் போற்றுங்கள்.

97. தேவன் அரசாளுகிறார், களிகூருங்கள்.

98. கர்த்தருக்குப் புதுப்பாட்டை பாடுங்கள்.

99. பரிசுத்தரான தேவனை உயர்த்தி மகிமைப்படுத்துங்கள்.

100. மகிழ்ச்சியோடு கர்த்தருக்கு ஆராதனை செய்யுங்கள்.

101. பரிசுத்தமாய், நீதியாய் வாழத் தீர்மானித்தல்.

102. துன்பத்தினால் வருந்தினவரின் துயரப்பாட்டாகிய ஜெபம்.

103. தேவனுடைய இரக்கங்களுக்காக என் ஆத்துமாவே கர்த்தரை ஸ்தோத்தரி.

104. படைப்பில் வெளிப்படும் தேவனுடைய மகிமை.

105. இஸ்ரவேலரிடத்தில் விளங்கிய தேவனுடைய அற்புதமான செயல்களுக்காக தேவனைத் துதியுங்கள்.

106. இஸ்ரவேலரின் துரோகமும், தேவனுடைய தயவும்.

107. இக்கட்டுகளுக்கு நீங்கலாக்கி விடுவிக்கிற கர்த்தரைத் துதியுங்கள்.

108. தேவனைத் துதித்து வெற்றிக்காக ஜெபித்தல்.

109. துன்மார்க்கர் பழிவாங்கப்பட ஜெபம்.

110. தேவன்: இராஜா, ஆசாரியர், நியாயாதிபதி.

111. தேவனுடைய கிரியைகளின் மகத்துவம்.

112. தேவ பக்தியுள்ளவர்களுக்கு கிடைக்கும் ஆசீர்வாதங்கள்.

113. உன்னத தேவன் தாழ்ந்தோரை உயர்த்துகிறார்.

114. இஸ்ரவேலர் எகிப்திலிருந்து மீட்கப்பட்டு புறப்பட்டதைக் குறித்து பாட்டு.

115. விக்கிரக ஆராதனையின் மதிகேடு. ஆசீர்வதிக்கும் தேவன் மீது நம்பிக்கை வைத்தல்.

116. மரணக்கட்டுகளிலிருந்து தப்புவிக்கப் பட்டதற்காக தேவனை ஆராதித்தல்

117. எல்லாரும் கர்த்தரைத் துதியுங்கள்.

118. தேவன் மேல் நம்பிக்கை: துதியும், ஜெபமும்.

119. மகிமை நிறைந்த தேவனுடைய வார்த்தையைப் புகழ்ந்து பாடுதல்.

120. வஞ்சனைக்காரரிடமிருந்து தப்பு விக்கப்பட வேண்டிக்கொள்ளுதல்.

121. உறங்காத தேவன் உன்னைக் காக்கிறார்.

122. எருசலேமின் சமாதானத்திற்காக வேண்டிக்கொள்ளுதல்.

123. தேவனுடைய இரக்கத்தை எதிர் பார்த்துக் காத்திருத்தல்.

124. நம் அருகே இருந்து நமக்கு உதவி செய்கிற தேவனுக்கு ஸ்தோத்திரம்.

125. தம்மை நம்புகிற மக்களைச் சுற்றிலுமிருக்கிற தேவன்.

126. சிறையிருப்பிலிருந்து விடுதலை.

127. சுக வாழ்வைக் கட்டளையிடுகிற கர்த்தர்.

128. தேவபக்தியுள்ள குடும்பத்தார்க்கு கிடைக்கும் ஆசீர்வாதங்கள்.

129. சத்துருக்கள் நிர்மூலமாக வேண்டிக் கொள்ளுதல்.

130. ஆழங்களிலிருந்து கூப்பிடுதல்.

131. கர்த்தரின் மேல் வைக்கும் அமரிக்கையான நம்பிக்கை.

132. கர்த்தரின் வீட்டைக் குறித்த பக்தி வைராக்கியம்.

133. சகோதர ஐக்கியத்தின் மேன்மை.

134. இராக்காலத்தில் தேவனைத் துதியுங்கள்.

135. இஸ்ரவேலரின் தேவன் பெரியவர் அவரைத் துதியுங்கள்.

136. தேவனின் கிருபைக்காக, அவரது அதிசயக் கிரியைகளுக்காக அவரைத் துதியுங்கள். கர்த்தர் நல்லவர்.

137. பாபிலோன் சிறையிருப்பில் அழுகையோடு பாடுதல் .

138. என் ஜெபத்திற்கு பதில் தரும் தேவனுடைய தயவிற்காக அவரைத் துதிப்பேன்.

139. சர்வ வல்ல தேவன் எங்குமிருந்து எல்லாவற்றையும் அறிகிறார்.



140. எதிரிகளின் கொடுமையிலிருந்து தப்புவிக்கப்பட ஜெபம்.

141. மற்றவர்களுடன் சேர்ந்து பாவம் செய்யாமல் தேவனுக்கு உண்மை யாயிருக்க ஜெபம்.

142. உபத்திரவத்திலிருந்து மீட்கப்பட ஜெபித்தல்.

143. விடுதலைக்காக ஜெபம்.

144. வெற்றிக்காக, விடுதலைக்காக ஜெபம்.

145. தேவனுடைய மகத்துவமான கிரியைகளுக்காகவும், அவரது உருக்கமான கிரியைகளுக்காகவும், அவரைப் புகழுதல்.

146. பரம சகாயரான தேவனைத் துதியுங்கள். அவரை நம்புங்கள்.

147. இஸ்ரவேலருக்கு தேவன் காண்பித்த அன்பிற்காகவும் அவரது கிரியை களுக்காகவும் அவரைத் துதியுங்கள்.

148. முழுசிருஷ்டியும் தேவனைத் துதித்தல்.

149. இஸ்ரவேல் மகிழ்ச்சியோடு கர்த்தரைத் துதித்தல். பரிசுத்தவான்களின் பாக்கியங்கள்.

150. அல்லேலுயா இசைக் கருவிகளோடு தேவனைத் துதியுங்கள்.

சங்கீதப் புத்தகத்தை அடிக்கடி வாசியுங்கள். இந்திய வேதாகமச் சங்கத்தார். வெளியிட்டுள்ள சங்கீதப் புத்தகம் தனிப்பிரதி ஒன்று வாங்கி வைத்துக் கொண்டு அடிக்கடி வாசியுங்கள்.

### சிந்தனைக்கு

☞ கர்த்தாவே என்று ஆரம்பித்து கர்த்தாவே என்று முடியும் சங்கீதம் எது?

☞ எந்த சங்கீதங்கள் ஒன்றுபோல காணப்படுகின்றன? உதாரணம் 14,53

☞ உங்களுக்கு எத்தனை சங்கீதங்கள் மனப்பாடமாகத் தெரியும்?

☞ உங்களுக்கு மிகவும் பிடித்தமான சங்கீதம் எது?

### நீங்களே செய்து பாருங்கள்

1. நீங்கள் மனப்பாடமாகப் படித்துக் கொள்ளவேண்டிய சங்கீதங்கள்: 1, 3, 4, 15,16, 19, 23, 24, 25, 32, 34, 42, 46, 51, 63, 84, 86, 90, 91, 95, 100, 103, 111, 112, 113, 114, 115,116,117, 121, 126, 127, 132, 136, 138, 139, 143, 145, 149, 150, இந்த சங்கீதங்களை மனப்பாடமாகப் படித்துக் கொண்டு அடிக்கடி தியானித்துப் பாருங்கள்.
2. சங்கீதம் 51.இந்த சங்கீதம் பாவ அறிக்கையின் சங்கீதமாகும். ஒவ்வொரு நாளும் உங்களையே நீங்கள் தற்பரிசோதனை செய்து பார்த்து விட்டு, உங்கள் பாவங்களுக்காக மனம் வருந்தி, பாவ அறிக்கை செய்யும் போது இந்த சங்கீதத்தை முழங்காலில் நின்று கருத்துடன் வாசியுங்கள். இந்த சங்கீதத்தை மனப்பாடமாகப் படித்துக் கொண்டு உங்களுடைய சொந்த ஜெபமாக இந்த சங்கீதத்தை வாய்விட்டுச் சொல்லுங்கள்.
3. ஒவ்வொருநாளும்இரவில் தூங்குவதற்கு முன் சங்கீதம் 91 ஐ சொல்லுங்கள்
4. துதியின் சங்கீதங்களை அடிக்கடி வாய்விட்டு வாசித்து தேவனைத் துதியுங்கள்.

### துதியின் சங்கீதங்கள்

சங்கீதப் புத்தகம் தேவனைத் துதிக்கும் பாடல்களைக் கொண்ட புத்தகமாகும், 150 சங்கீதங்களில் 50 சங்கீதங்கள் தேவனைத் துதிக்கும் வகையில் எழுதப்பட்ட சங்கீதங் களாகும். தேவனைப் பல விதங்களில் துதிக்கலாம். துதியின் சங்கீதங்களை வாசித்து தேவனை துதிப்பது பயன் தரக்கூடிய முறையாகும்.

8,18, 21, 24, 30, 33, 40, 45, 47, 48, 63, 65, 66, 67, 75, 76, 84, 86, 92, 93, 95, 96, 97, 98 ,99, 100, 103, 104, 105, 107 ,108, 111, 112, 113 ,115, 116, 117, 118, 124, 134,135,136,138, 145, 146, 147, 148, 149, 150.

### சங்கீதப் புத்தகத்தில் சில முக்கிய குறிப்புகள்

தாவீது ராஜா எழுதின 70-க்கும் மேற்பட்ட சங்கீதங்களில் 14 சங்கீதங்கள் திட்டவட்டமான சரித்திர சம்பவங்களைச் சார்ந்த சங்கீதங்களாகும்.

கீழே கொடுக்கப்பட்டிருக்கும் அதிகாரங்களை ஒப்பிட்டு சங்கீதங் களைப் படித்துப் பாருங்கள்.

| I சாமுவேல் | சங்கீதம் |
|---|---|
| 19 | 59 |
| 21 | 34 |
| 21 | 56 |
| 2 2 | 142 |
| 2 2 | 52 |
| 2 3 | 54 |
| 2 4 | 57 |
| 2 4 | 63 |

| II சாமுவேல் | சங்கீதம் |
|---|---|
| 22 | 18 |
| 12 | 51 |
| 15 | 3 |
| 15 | 7 |

- ஆண்டவராகிய இயேசு கிறிஸ்து சிலுவையில் சொன்ன 7 வார்த்தைகளில் 3 வார்த்தைகள் சங்கீதப் புத்தகத்தி லிருந்து எடுக்கப்பட்டவை
- சங்கீதம் 22:1 என் தேவனே, என் தேவனே, ஏன் என்னை கைவிட்டீர்? எனக்கு உதவி செய்யாமலும், நான் கதறிச் சொல்லும் வார்த்தைகளைக் கேளாமலும் ஏன் தூரமாயிருக்கிறீர்?
- 32:5 நான் என் அக்கிரமத்தை மறைக்காமல், என் பாவத்தை உமக்கு அறிவித்தேன்;என் மீறுதல்களைக் கர்த்தருக்கு அறிக்கையிடுவேன்.

  22:15 என் பெலன் ஓட்டைப்போல் காய்ந்தது; என் நாவு மேல்வாயோடே ஒட்டிக்கொண்டது; என்னை மரணத் தூளிலே போடுகிறீர்.
- சங்கீதப் புத்தகத்தை நீங்கள் வாசிக்கும் போது தேவனுடைய பெயர்களையும், அவருடைய குணாதிசயங்களையும், அவருடைய கிரியைகளையும், அவரைத் துதித்துப் போற்றுவதற்கான வாக்கியங் களையும் குறித்துக் கொண்டு அவைகளை மனப்பாடமாகப் படித்துக் கொண்டு உங்கள் ஜெபத்தில் பயன்படுத்துங்கள்.

**வாக்குத்தத்தமான வசனங்கள்:**
*2:8,12:5, 32:8, 78:2, 81:10,14,16, 89:24-29, 33-37*

சங்கீதம் 91 பாதுகாப்பைப் பற்றிய வாக்குத்தத்தமான சங்கீதம்.

**சங்கீதங்களில் சில முக்கிய குறிப்புகள்**

**'அல்லேலூயா' என்று வரும் வசனங்கள்**
*104:35,105:45, 106:1,48, 111:1, 112:1 113:1 115:18, 116:19, 117:2, 135:1,21, 146:1,10, 147:20, 148:1,14, 149:1,9,150:1, 6,*

**பாக்கியவான்கள் என்று வரும் வசனங்கள்**
*1:2, 2:12, 32:1,2, 34:8, 40:4, 41:1,2, 65:4, 84:4,5,12, 94:13, 106:3, 112:1,5, 119:1,2, 127:6, 128:1, 137:8,9, 146:5,*

**தேவனுடைய வார்த்தையைப் பற்றிய வசனங்கள்**
119 ஆம் சங்கீதத்தின் 121,122 என்ற 2 வசனங்களைத் தவிர மற்ற எல்லா வசனங்களிலும் தேவனுடைய வார்த்தையைப் பற்றி எழுதப் பட்டிருக்கிறது. தேவனுடைய வார்த்தையைப் பற்றி சொல்லப் பட்டிருக்கும் மற்ற வசனங்கள். சங்கீதம் 12:6, 18:30, 19:7-11, 33:4, 37:31,78:1,2, 86:11, 138:2,149:8.

**சங்கீதங்களில் அதிகாலை, காலை என்று வரும் வசனங்கள்**
5:3,17:15, 55:17 அந்தி என்றால் காலை என்று பொருள் 46:5,49:14, 59:16, 63:1, 73:14, 88:13, 90:14, 92:3, 101:8,108:2 119:147,148,130:6, 139:18, 143:8,

**பாவ அறிக்கையின்வசனங்கள்**
*19:12-14, 25:7,18, 31:10, 32:5, 38:4,5,18, 79:8,9, 101:3,4, 130:3*

**திருச்சபைபையக் குறித்தவசனங்கள்**
5 :7, 22 : 25, 23 :6, 26:8, 27:4, 36:8, 42:4, 43 :3,4, 48 :9, 52:8, 55:14, 63:2, 65 : 4, 68:29, 69:9, 79:1, 84:1-4,10, 93:5, 100:4, 118:26, 122:1,9,132:7, 134:1,135:2, 150:1,

**நீங்களே செய்து பாருங்கள்:**

- ☞ சங்கீதப் புத்தகம் முழுவதையும் வேகமாக மேலோட்டமாக வாசித்துப் பாருங்கள் இதற்கென 2 மணி நேரம் எடுத்துக் கொள்ளுங்கள்.
- ☞ வாய்விட்டு வாசிக்கும் வேகத்தில் சங்கீதப் புத்தகம் முழுவதையும் தொடர்ச்சியாக வாசித்து முடிக்க 6 மணி நேரம் ஆகிறது.
- ☞ ஒரு நாளைக்கு ஒரு மணி நேரம் வாசித்தால் 6 நாட்களில் வாசித்து விடலாம்.
- ☞ உங்களுக்குப் பிரியமான சங்கீதங்களை மனப்பாடமாக படித்துக் கொள்ளுங்கள். சங்கீதங்கள் 19, 23, 24, 25, 51, 119, 145,
- ☞ ஒப்பிட்டுப்பாருங்கள் சங்கீதம்
  *14 = 53* *88 = 111*
- ☞ இந்திய வேதாகம சங்கத்தார் வெளியிட்டுள்ள 'சங்கீதப் புத்தகம்' என்ற பிரதி ஒன்று வாங்கி வைத்துக் கொண்டு செல்லுமிடமெல்லாம் எடுத்துச்செல்லுங்கள். சங்கீதங்களை வாசியுங்கள்.

சங்கீதப் புத்தகம் முழுவதையும் 30 நாட்களில் வாசித்து முடிக்க ஓர் அட்டவணை

| நாள் | அதிகாரங்கள் | நாள் | அதிகாரங்கள் |
|---|---|---|---|
| 1 | 1 - 6 | 16 | 78 - 79 |
| 2 | 7 - 12 | 17 | 80 - 84 |
| 3 | 13 -18 | 18 | 85 - 89 |
| 4 | 19 - 24 | 19 | 90 - 95 |
| 5 | 25 - 29 | 20 | 96 - 102 |
| 6 | 30 - 34 | 21 | 103 - 105 |
| 7 | 35 - 37 | 22 | 106 - 108 |
| 8 | 38 - 41 | 23 | 109 - 115 |
| 9 | 42 - 47 | 24 | 116 - 118 |
| 10 | 48 - 51 | 25 | 119: 1-88 |
| 11 | 52 - 57 | 26 | 119: 89 -176 |
| 12 | 58 - 63 | 27 | 120 - 131 |
| 13 | 64 - 68 | 28 | 132 - 138 |
| 14 | 69 - 72 | 29 | 139 - 144 |
| 15 | 73 - 77 | 30 | 145 - 150 |

சங்கீதப் புத்தகங்கள் அல்லது ஞான ஆகமங்கள் என்ற பிரிவில் சங்கீதப் புத்தகத்தை அடுத்துள்ள நீதிமொழிகள் பழைய ஏற்பாட்டு புத்தக வரிசையில் 20ஆவது புத்தகமாக அமைந்துள்ளது.

## இப்புத்தகத்தின் செய்தி

நாம் பொதுவாக பழமொழிகள் என்று சொல்லும் வகையில் நீதிமொழிகள் காணப்படுகின்றன. பழமொழிகள் அல்லது நீதிமொழிகள் மூலமாக சரியான பயனுள்ள வாழ்க்கைக்கான தத்துவங்கள் போதிக்கப்பட்டன. பல நூற்றாண்டுகளுக்கு முன் வாழ்ந்த கிரேக்கர்கள் இதை ஒரு போதனா முறையாக கையாண்டனர், மக்கள் எளிதாக விளங்கிக்கொள்ளும் விதத்தில் போதிப்பதற்கு இது ஓர் இனிய முறையாகும். வாக்கியங்கள் சுருக்கமாகவும், மனதில் சுருக்கென்று தைக்கும் வகையிலும் எழுதப் பட்டிருப்பதால் வாழ்க்கைக்கேற்ற உண்மைகளை நினைவில் வைத்துக் கொள்ள வாய்ப்பு உண்டு. சரியான தத்துவங்களைக் கற்றுக்கொள்ளும் திறந்த மனதுள்ளவர்களுக்கும், உயரிய போதனைகளை ஏற்றுக் கொள்ளும் உணர்வுள்ள உள்ளம் கொண்டவர்களுக்கும் நீதிமொழிகள் புத்தகம் என்றுமே நினைவில் நிற்கும் நற்போதகமாக அமைந்திருக்கும்.

இவ்வுலகத்தில் வாழும் தேவனுடைய மக்கள் சரியான வழியில் செல்லவும், சிறந்த விதத்தில் வாழவும் அழைக்கப் பட்டிருக்கிறார்கள். சரியானவை எவை என்பதை தெய்வீகக் கண்ணோட்டத்தில் அறிந்துகொள்ள நீதிமொழிகள் வழிகாட்டுகிறது. குடும்ப வாழ்க்கை, கல்வி, சமூக வாழ்க்கை, பொருளாதாரம், வியாபாரம், அரசாட்சி, நம்மைச் சுற்றி வாழ்பவர்களோடு நாம் கொள்ளும் உறவுகள் போன்ற பல்வேறு வகையான அனுபவங்கள் வழியே நாம் கடந்து செல்லும் போது, பரிசுத்தமுள்ள ஆண்டவரின் விருப்பத்திற்கேற்றவாறு நம்முடைய வாழ்க்கை முறைகளை அமைத்துக் கொள்ள, இப்புத்தகத்தை நாம் அடிக்கடி படிக்க வேண்டும்.

நீதிமொழிகள் என்ற இந்தப் புத்தகத்தில் 31 அதிகாரங்கள் உள்ளன. ஏராளமான எச்சரிப்புகளையும், புத்திமதிகளையும், எடுத்துச் சொல்லும் இப்புத்தகத்தில் நடைமுறை வாழ்க்கைக்கான தெய்வீகத் தத்துவங்கள் நேரடியான கூற்றுக்களில் கொடுக்கப் பட்டிருக்கின்றன. ஒவ்வொரு நாட்டவருக்கும் முதுமொழிகள் அல்லது பழமொழிகள் உண்டு என்று நாம் அறிவோம். யூத மக்களுக்கும் எபிரெய மொழியில் நூற்றுக்கணக்கான பழமொழிகள் (நீதிமொழிகள்) உண்டு. அவைகளில் தெரிந்தெடுக்கப்பட்ட நீதிமொழிகள் தொகுத்து இப்புத்த கத்தில் தரப்பட்டுள்ளன.

இணையான, எதிரிடையான, ஒப்புமையான வாக்கியங்களில் நீதிமொழிகள் எழுதப்பட்டிருக்கின்றன. மேலோட்டமாக பார்க்கும்போது நீதிமொழிகளின் அதிகாரங்களில் கருத்துக்கள் கோர்வையாக இல்லாதது போன்று தோன்றுகின்றது. ஆனால் ஆழ்ந்து படித்தால் போதனைகள், ஞானம், நீதிமான், மூடன் போன்ற குறிப்பிட்ட தலைப்புகளின் கீழ் இடம் பெறுவதைக் காணலாம்.

## ஏன் எழுதப்பட்டது?

மனிதன் நல்வழியில் ‘நீதியின் பாதையில்’ நன்னெறியின்படி நடக்க வேண்டும். சரியானவை- தவறானவற்றைப் பகுத்தறிய வேண்டும். தேவபக்திக்கேதுவான நற்பண்புகளில் தேர்ச்சி பெற வேண்டும்.

**எழுதியவர்**

சாலொமோன் ராஜா எழுதிய 3000 நீதிமொழிகளில் 800 இந்தப் புத்தகத்தில் இடம் பெற்றிருக்கின்றன. இதைத்தவிர ஞானிகளால் எழுதப் பட்ட வேறு சில முதுமொழிகளும், எசேக்கியா ராஜாவின் மனிதர் தொகுத்து எழுதிய தனித்தனி எச்சரிப்பு மொழிகளும், ஆகூர், லெமுவேல் என்பவர்களால் எழுதப்பட்டவைகளும் இப்புத்த கத்தில் இடம் பெற்றுள்ளன.

**எழுதப்பட்ட காலம்:**

கி.மு.931 இல் சாலொமோனின் நீதிமொழிகள் எழுதப்பட்டன 230 ஆண்டுகளுக்குப் பின்னர் எசேக்கியா ராஜா அதைத் தொகுத்தார்.

**பகுப்பாய்வு:**

*1:1 - 9 :18* ஞானம் கொடுக்கும் அழைப்பு

*10:1 - 22:16* சாலொமோனின் நீதிமொழிகள்

*22:17 - 24:22* ஞானிகளின் வார்த்தைகள்

*25:1 - 29:21* எசேக்கியா தொகுத் தெழுதிய சாலொமோனின் நீதிமொழிகள்

*30:1- 31:31* ஆகூர், லெமுவேல் என்பவர்களின் நீதிமொழிகள்.

**முக்கிய அதிகாரங்கள்:**

அதிகாரம் 8 - ஞானத்தின் மேன்மை

அதிகாரம் 10- நீதிமானும்துன்மார்க்கனும்

அதிகாரம் 31- குணசலியான பெண்மணி

**திறவுகோல் வசனங்கள்:**

1 : 7, கர்த்தருக்குப் பயப்படுதலே ஞானத்தின் ஆரம்பம்; மூடர் ஞானத்தையும் போதகத்தையும் அசட்டைபண்ணுகிறார்கள்.

*9:10* கர்த்தருக்குப் பயப்படுதலே ஞானத்தின்ஆரம்பம்; பரிசுத்தரின் அறிவே அறிவு.

**முக்கிய வார்த்தைகள்:**

1:2 என்ற வசனத்தில் ஞானம், போதனை என்ற வார்த்தைகளைப் பார்க்கிறோம். ஞானம் என்றால் திறமை, போதனை என்றால் கட்டுப்பாடு அல்லது ஒழுங்கு என்று பொருள்படும். ஞானம் (100), கர்த்தருக்குப் பயப்படுதல் (16), என் மகனே (20), கடிந்துகொள்ளுதல் (20), இருதயம் (55), நீதிமான் (68), துன்மார்க்கர்(80). இந்த வார்த்தைகளை அடுத்துள்ள எண்கள் நீதிமொழிகள் புத்தகத்தில் இந்த வார்த்தைகள் எத்தனை முறை வருகிறது என்று காட்டுகிறது.

கட்டுப்பாடு இல்லாமல் திறமையில் தேர்ச்சி பெறமுடியாது. வாழ்க்கையைச் சிறந்த முறையில் வாழ்வதற்கு திறமை தேவை. திறமை வளர ஒழுக்கமும், கட்டுப்பாடும் தேவை. நீங்கள் பாவம் எது, பரிசுத்தம் எது என்று பகுத்தறிவுடன் வாழ பண்புள்ள வர்களாகவும், பலருக்கும் பயனுள்ளவர்களாகவும் வாழ நீதிமொழிகள் புத்தகத்தைப் பல முறை வாசியுங்கள்.

**இப்புத்தகத்தை வாசிப்பதற்கான ஆலோசனை**

நீதிமொழிகளின் புத்தகத்தில் 31 அதிகாரங்களில் 915 வசனங்கள் தமிழ் வேதாகமத்தில் 28 பக்கங்களில் அடங்கியுள்ளன. இப்புத்தகத்தை தொடர்ச்சியாக நீங்கள் வாசித்தால் இரண்டு மணி நேரத்திற்குள் வாசித்து விடலாம். ஒரு நாளைக்கு நான்கு பக்கங்கள்(4 அதிகாரங்கள்) வாசித்தால் ஒரு வாரத்தில் வாசித்து விடலாம்.

நீதிமொழிகள் என்ற இப்புத்தகத்தை பல விதங்களில் வாசிக்கலாம்.

நாள் ஒன்றிற்கு ஒரு அதிகாரத்தை வாசிப்பது மிகச்சிறந்த முறையாகும். ஒவ்வொரு நாளும் அந்த நாளுக்குரிய தேதியின் எண்ணைக் கொண்ட அதிகாரத்தை வாசித்துப் பாருங்கள். உதாரணமாக 5ஆம் தேதியன்று 5 ஆம் அதிகாரத்தை வாசியுங்கள்.

நீதிமொழிகள் புத்தகத்தை 10 நாட்களில் வாசித்து முடிக்க ஓர் அட்டவணை

| நாள் | அதிகாரங்கள் |
|---|---|
| 1 | 1-3 |
| 2 | 4-6 |
| 3 | 7-9 |
| 4 | 10-12 |
| 5 | 13-15 |
| 6 | 16-18 |
| 7 | 19-21 |
| 8 | 22-24 |
| 9 | 25-27 |
| 10 | 28-31 |

**நீங்கள் வாசிக்கும் போது:**

- வாசிப்பதற்கு முன் ஒரு நிமிடம் ஜெபித்து உங்களையே ஆயத்தப் படுத்திக் கொள்ளுங்கள்.
- முதலில் முழு அதிகாரத்தையும் மேலோட்டமாகப் பாருங்கள்.
- பின் வாய்விட்டு கவனமாக கருத்துடன் வாசியுங்கள்
- உங்களுக்குத் தெரியுமா? இந்த வகையில் ஒரு அதிகாரத்தை வாசித்து முடிப்பதற்கு 5 நிமிடங்களே ஆகின்றன, இது உண்மை தானா என்று நீங்களே கடிகாரத்தை கவனித்து சரிபாருங்கள்.

நீங்கள் வாசிக்கும்போது ஒரு தடவைக்கும் மேல் வரும் வார்த்தைகள் எந்த வசனங்களிலெல்லாம் வருகிற தென்று கவனியுங்கள், கண்டுபிடியுங்கள், குறித்துக் கொள்ளுங்கள், உங்கள் மனதில்படும் வார்த்தை அல்லது வாக்கியம் அல்லது வசனங்களை மனப்பாடமாகப் படித்துக்கொள்ள முயற்சிசெய்யுங்கள்.

**நீதிமொழிகள் புத்தகத்தில் ஒரு அதிகாரத்தை நீங்கள் வாசிக்கும் போது**

- முதலில் மேலோட்டமாக வேகமாக வாசியுங்கள். பின்பு வாய்விட்டு கருத்துடன் வாசியுங்கள். கீழேயுள்ள கேள்விகளுக்குப் பதில் கண்டு பிடித்து யோசித்துப்பாருங்கள்.

1. மீண்டும் மீண்டும் வரும் வார்த்தை களைக் கவனியுங்கள். அவைகளைக் குறித்துக் கொண்டுஅந்த வார்த்தைகள் காட்டும் கருத்துக்களைக் கோர்வைப் படுத்துங்கள்.
2. அதே அதிகாரத்திற்குள் ஒப்பிட்டுப் பார்க்கக் கூடிய வசனங்களைக் கண்டுபிடியுங்கள்.
3. நீங்கள் வாசிக்கும் அதிகாரம் ஏதாவது ஒரு குறிப்பிட்ட பொருளைப் பற்றியதா என்று கவனியுங்கள்.
4. உங்கள் உள்ளத்தைக் கவரக்கூடிய அல்லது சிந்தனையைத் தூண்டக் கூடிய வசனத்தையோ வார்த்தையை கண்டுபிடியுங்கள்.
5. நீங்கள் வாசிக்கும் அதிகாரத்தை எத்தனை பிரிவுகளாக அல்லது பத்திகளாகப் பிரிக்கலாம் என்று பாருங்கள்.
6. உங்களுக்கு விளங்கிக்கொள்ளக் கடினமான வாக்கியங்கள் அல்லது வார்த்தைகள் எதுவென்று பாருங்கள்.
7. நீங்கள் வாசிக்கும் அதிகாரத்திலுள்ள ஏதாவது ஒரு வசனத்தை அதற்கு முந்தின அல்லது பிந்தின அதிகாரத்திலுள்ள ஏதாவது ஒரு வசனத்தோடு சம்பந்தப்படுத்த முடியுமா என்று யோசியுங்கள்.
8. தேவனைப் பற்றி என்ன உண்மைகள் சொல்லப்பட்டிருக்கிறது என்று கண்டு பிடியுங்கள்.
9. நீங்கள் வாசிக்கும் அதிகாரத்திலுள்ள ஏதாவது ஒரு வசனம் அல்லது வசனங்கள் நீதிமொழிகள் புத்தகத்தின் மற்ற அதிகாரங்களில் வருகிறதா என்று தேடிப் பாருங்கள்.
10. இந்த அதிகாரத்திலுள்ள வசனம் வேதாகமத்திலுள்ள மற்ற புத்தகங் களிலுள்ள ஏதாவது ஒரு சம்பவம் அல்லது வசனத்தை நினைவு படுத்துகிறதா என்று யோசித்துப் பாருங்கள்.

**நீதிமொழிகள் புத்தகத்தில் ஒரு அதிகாரத்தை நீங்கள் வாசிக்கும் போது**

கீழ்க்காணும் உண்மைகளை கண்டு பிடித்து, குறித்துக்கொண்டு, தொகுத்து, எழுதி வைத்துக்கொண்டு கருத்துக்களை யோசித்துப் பாருங்கள்.

**1. தேவனைப்பற்றி விளக்கும் வார்த்தைகள்**

உதாரணம் 2 : 6 கர்த்தர் ஞானத்தைத் தருகிறார்

**2. நற்குணமுடையவர்களைக் குறிக்கும் வார்த்தை**

உதாரணம் 12: 2 நல்லவன்
4 குணசாலியான ஸ்திரீ
5 நீதிமான்கள்
17 சத்தியவாசகன்

**3. தீயவர்களைக் குறிக்கும் வார்த்தைகள்**

உதாரணம்12 : 2 துர்சிந்தனையுள்ள மனுஷன்
5 துன்மார்க்கன்
8 மாறுபாடான இருதயமுள்ளவன்

**4. நற்குணத்தைக் குறிக்கும் வார்த்தைகள்**

உதாரணம் 28: 18 உத்தமம்
20 உண்மையுள்ள

**5. துர்க்குணத்தைக் குறிக்கும் வார்த்தைகள்**

உதாரணம் 12 : 22 பொய் உதடுகள்
13 : 6 துன்மார்க்கம்

**ஒப்பிட்டுப் பாருங்கள்**

நீதிமொழிகள் பழைய ஏற்பாட்டுப் புத்தக வரிசையில் 20 ஆவது புத்தகம். புதிய ஏற்பாட்டின் புத்தக வரிசையில் 20 ஆவது புத்தகமாகிய யாக்கோபு, நீதிமொழிகள் புத்தகத்தைப் போல் காணப்படுகிறது. ஒப்பிட்டுப் பாருங்கள்.

(4)

**வாசித்துப்பாருங்கள்**

இந்திய வேதாகமச் சங்கத்தாரால் புதிய மொழி பெயர்ப்பில் வெளியிடப்பட்டிருக்கும் ‘வெற்றி வாழ்விற்கான நீதிமொழிகள்’ என்ற பிரதியை வாசித்துப் பயன்படுத்துங்கள்.

| அதிகாரம் | மொத்த வசனங்கள் | மனப்பாட வசனங்கள் | வாக்குத்தத்த வசனங்கள் | ஆலோசனை | ஆத்துமா | கர்த்தருக்குப் பயப்படுதல் |
|---|---|---|---|---|---|---|
| 1 | 33 | 33 | 23, 33 | | | 7, 29 |
| 2 | 22 | 6 | | | 10 | 5 |
| 3 | 35 | 11 | 1,2,5,6,9,10,26, | | | 7 |
| 4 | 27 | 23 | 23 | | | |
| 5 | 23 | 21 | | | | |
| 6 | 35 | 20 | | | 32 | |
| 7 | 27 | 24 | | | | |
| 8 | 36 | 17 | 17, 34 | | 36 | 13 |
| 9 | 18 | 10 | | | | 10 |
| 10 | 32 | 17 | 2,3,6,7,12,22,24,27 30 | | | 27 |
| 11 | 31 | 27 | 25, 28 | 14 | 17,25,30 | |
| 12 | 28 | 19 | 3, 19, 21, 28 | 15 | | |
| 13 | 25 | 13 | 21 | 10 | 2, 4,19 | |
| 14 | 35 | 26 | 22, 26 | | | 2,26, 27 |
| 15 | 33 | 1 | 29 | 22 | 32 | 16, 23. |
| 16 | 33 | 9 | 3, 7 | | 17,24 | 6 |
| 17 | 28 | 3 | | | | |
| 18 | 24 | 10 | 10, 21 | | 7 | |
| 19 | 29 | 27 | 16, 23 | 20 | 2,8,16,18 | 23 |
| 20 | 30 | 22 | | 18 | | |
| 21 | 31 | 31 | | | 23 | |
| 22 | 29 | 1 | 6 | | 5 | 4 |
| 23 | 35 | 1 | | | 14 | 17 |
| 24 | 34 | 21 | 16 | 6 | 12,14 | 21 |
| 25 | 28 | 28 | 21, 22 | | 13,25 | |
| 26 | 28 | 14 | | | | |
| 27 | 27 | 1 | | 9 | | |
| 28 | 28 | 13 | 13 | | | |
| 29 | 27 | 1 | 25 | | 17, 24 | |
| 30 | 33 | 9 | | | | |
| 31 | 31 | 8 | | | | 10 |

**பணம், பொருள் ,பொக்கிஷம்**

அதிகாரங்கள் : 11, 13, 15, 17, 19, 21, 23, 27,

## நீதிமொழிகள்

தலைப்புகள்/ கருப்பொருளின் கீழ் படிப்பது எப்படி?

*(Theme / Topic)*

இந்தப் புத்தகத்தை தலைப்பின் கீழ் படிப்பது ஒரு நல்ல முறையாகும். ஞானம் என்பது இந்தப் புத்தகத்தில் பலமுறை வரும் வார்த்தையாகும். இந்தப் புத்தகத்தின் முக்கிய செய்தியே ஞானத்தைப் பற்றியதாகும். ஒரு மனிதன் பேசுவது போல ஞானம் பேசுகின்ற நடையில்எழுதப்பட்டிருக்கும் பல வசனங்களை நீங்கள்கவனிக்கலாம். உதாரணம் 1:20 -38, 8:1-36

செய்யுள் நடையில் எழுதும்போது ஒரு உண்மையின் நடையில் விவரித்துக் கூற இப்படிப்பட்ட இலக்கியநடை கையாளப்பட்டது. ஞானம் என்று சொல்லப்பட்டிருக்கும் பல இடங்களில் ஆண்டவராகிய இயேசு கிறிஸ்துவை ஒப்பிட்டு வாசித்துப் பாருங்கள். I கொரிந்தியர்1:31 கொலோசெயர் 2: 3

- ✍ ஒவ்வொரு தலைப்பு/கருப்பொருளின் கீழ்வரும் வசனங்களைக் கவனியுங்கள், கண்டு பிடியுங்கள் .
- ✍ அந்த வசனங்களை ஒரு நோட்டில் அல்லது பேப்பரில் எடுத்து எழுதுங்கள்.
- ✍ வெவ்வேறு தலைப்புகளில் தொகுத்து எழுதுங்கள்.
- ✍ உதாரணமாக: குடும்பம் என்றால் கணவன், மனைவி பிள்ளைகள்.
- ✍ இந்த வசனங்களிலிருந்து நடை முறை வாழ்க்கைக் கான கருத்துக்களை யோசித்துப் பாருங்கள்.
- ✍ ஒவ்வொரு அதிகாரத்திலும் நீதிமான் - துன்மார்க்கன்
- ✍ நற்பண்பு -தீயகுணம் என்ற தலைப்புகளில் வரும் வார்த்தைகளை பிரித்து தொகுத்து எழுதிப்படியுங்கள்.

### தலைப்புகளில் முக்கியமான வார்த்தைகள்

தேவன்

என் மகனே, ஆலோசனை

கடிந்துகொள்ளுதல்

குடும்பம், நண்பர்கள்

கர்த்தருக்குப் பயப்படுதல்

ஞானம்/ஞானி/ புத்தி

விவேகம்

உணர்வு, மூடன், மதியீனம்,

வார்த்தைகள் (நாவு, உதடு, வாய்)

சிந்தை இருதயம்

சோம்பேறி,சோம்பல்

கவனம், ஜாக்கிரதை

பாவம்

நீதிமான்/துன்மார்க்கன்

பணம், பொருள் ,ஆத்துமா

வாக்குத்தத்தங்கள்

மிருகங்கள், பறவைகள்

**கடினமான வார்த்தைகளுக்கு பொருள் விளக்கும் வார்த்தைகளை உங்கள் வேதாகமத்தில் எழுதிக் கொள்வதற்கு உதாரணம்.**

### 1 அதிகாரம்

1. தாவீதின் குமாரனும் இஸ்ரவேலின் ராஜாவுமாகிய சாலொமோனின் நீதிமொழிகள்
2. இவைகளால் ஞானத்தையும் போதகத்தையும் அறிந்து, புத்திமதிகளை உணர்ந்து, -**விளங்கிக் கொண்டு**

3 விவேகம், நீதி, நியாயம், நிதானம் என்பவைகளைப் பற்றிய உபதேசத்தை அடையலாம்.

4. இவைகள் பேதைகளுக்கு வினாவையும், வாலிபருக்கு அறிவையும் விவேகத்தையும் கொடுக்கும். **புத்திக்கூர்மை**

| அதிகாரம் | வசனம் | வார்த்தை | பொருள் |
|---|---|---|---|
| 1 | 2 | உணர்ந்து | விளங்கிக்கொண்டு |
| 1 | 4 | வினாவை | புத்திக்கூர்மை |
| 1 | 6 | புதைபொருள் | புதிர்மொழிகள் |
| 1 | 9 | சிரசு | தலை |
| 1 | 9 | முடி | கிரீடம் |
| 1 | 9 | சரப்பணி | கழுத்துச்சங்கிலி |
| 1 | 10 | நயம் காட்டுதல் | ஆசைகாட்டுதல் |
| 1 | 11 | பதிவிருத்தல் | மறைந்திருத்தல் |
| 1 | 11 | முகாந்தரம் | காரணம் |
| 1 | 16 | தீவிரித்தல் | வேகம், தீவிரமாக, விரைவு |
| 1 | 17 | விருதா | வீண் |
| 1 | 17 | பட்சி | பறவை |
| 1 | 18 | ஒளிவைத்தல் | மறைவாக,கண்ணி,(சுருக்கு) வைத்தல் |
| 1 | 18 | பிராணன் | உயிர் |
| 1 | 22 | நிந்தனைக்காரன் | வெட்கத்திற்குரியவன் |
| 1 | 26 | ஆகடியம் | கேலி, பரியாசம். ஏளனம் |
| 1 | 26 | நகைத்தல் | சிரித்தல் |
| 1 | 27 | புசல் | புயல், பெருங்காற்று |
| 1 | 27 | இடுக்கண் | துன்பம் |
| 1 | 32 | நிர்விசாரம் | கவலையில்லாமை |
| 1 | 33 | விக்கினம் | தீமை, தடை, இடையூறு |
| 1 | 23 | கடிந்து கொள்ளுதல் | கண்டனம், கண்டித்தல் |
| 1 | 21 | ஒலிமுகவாசல் | நகரவாயில் |
| 1 | 21 | வசனித்துச் சொல்லுகிறது | பறைசாற்றுகிறது |
| 1 | 23 | என் ஆவியை | என் உள்ளத்திலிருப்பது |
| 1 | 31 | வழியின் பலனை | நடத்தையின் பலனை |
| 1 | 31 | புசிப்பார்கள் | அனுபவித்தல் |
| 1 | 33 | செவிகொடுக்கிறவன் | உற்று(அல்லது)கவனித்து கேட்பவன் |
| 2 | 8 | நெறி | நீதி, ஒழுங்குபாதை, நல்லொழுக்கம் |
| 2 | 16 | நாயகன் | வழிகாட்டி, தலைவன் |
| 2 | 17 | பரஸ்திரீ | விபச்சாரப்பெண், அந்நியப்பெண் |
| 2 | 21 | செவ்வையானவர்கள் | நல்லவர்கள், சரியானவர்கள் |
| 2 | 21 | உத்தமர்கள் | உண்மையானவர்கள், நல்லவர்கள் |
| 2 | 22 | நிர்மூலமாவார்கள் | கெட்டழிந்துபோவார்கள் |
| 3 | 8 | நாபி | (சரீரம்)உடல், தொப்புள் |
| 3 | 8 | ஊன் | கொழுப்பு, மாமிசம், உடல் |
| 3 | 14 | வர்த்தகம் | வியாபாரம் |
| 3 | 17 | ஆகாமியம் | அக்கிரமம் |
| 3 | 19 | ஸ்தாபித்தார் | ஏற்படுத்தினார், நிலைப்படுத்தினார் |

| அதிகாரம் | வசனம் | வார்த்தை | பொருள் |
|---|---|---|---|
| 3 | 27 | திராணி | திறமை, வசதி, பலம், தகுதி |
| 4 | 3 | மிருதுவான | மென்மையான |
| 5 | 6 | விகாரப்படுதல் | சுற்றித்திரிதல், வேறுபடுதல் |
| 5 | 18 | ஊற்றுக்கண் | தண்ணீர் ஊற்றுத் துவாரம் |
| 5 | 19 | வரையாடு | ஒருவகையான ஆடு |
| 5 | 20 | மயங்கித்திரிதல் | அறிவுகெடுதல், புத்தி கலங்குதல், அன்பில் மூழ்குதல் |
| 5 | 20 | தழுவுதல் | கட்டிப்பிடித்து அணைத்தல் |
| 5 | 23 | மதிகேடு | அறிவு (இல்லாத) கெட்ட |
| 6 | 12 | பேலியாள் | உதவாக்கரை |
| 6 | 14 | திரியாவரம் | குழப்பம், சண்டை, வீண்புரளி |
| 6 | 19 | அபத்தம் | பொய், அபாண்டம் |
| 6 | 35 | ஈடு | பதில், நஷ்டஈடு, பரிகாரம் |
| 7 | 4 | இச்சக வார்த்தை | இனிய சொல், ஆசைவார்த்தை |
| 7 | 6 | பலகணி | ஜன்னல் |
| 7 | 7 | பேதையர் | வாலிபர், அறிவு இல்லாதவர் |
| 7 | 16 | மஞ்சம் | படுக்கை, மெத்தை |
| 7 | 16 | சிங்காரித்தல் | அலங்கரித்தல் |
| 7 | 18 | பூரிப்போம் | மகிழ்ச்சியாயிருப்போம் |
| 7 | 21 | மதுரவாக்கு | இனிய வார்த்தை, வஞ்சக வார்த்தை |
| 7 | 21 | வசப்படுத்துதல் | கீழ்ப்படிய, சம்மதிக்கப்பண்ணுதல் |
| 8 | 6 | மேம்பாடான | சிறப்பான, மிக நல்லதான |
| 8 | 7 | விளம்பும் | சொல்லுதல், பேசுதல் |
| 8 | 11 | இச்சிக்கப்படத்தக்க | ஆசைப்படுகிற |
| 8 | 12 | நல்யுக்தி | நல்ல திட்டம் |
| 8 | 23 | அநாதி | ஆரம்பம், ஆதிமுதல் |
| 8 | 26 | ஜநிப்பித்தல் | படைத்தல், உருவாக்குதல் |
| 8 | 27 | வட்டணித்தல் | வட்டம், வளைவு, சுற்று |
| 9 | 2 | ஜந்து | பிராணி (மிருகம்) |
| 9 | 2 | போஜனபந்தி | விருந்து |
| 9 | 3 | பணிவிடைக்காரி | வேலைக்காரி |
| 9 | 5 | வார்த்த | ஊற்றின, கலக்கின |
| 9 | 7 | இலச்சை | அவமானம், வெட்கம் |
| 9 | 11 | விருத்தி | பெருக்கம், அதிகம் |
| 9 | 13 | நிர்மூடன் | முட்டாள் |
| 9 | 14 | ஆசனம் | நாற்காலி (சேர்) |
| 9 | 17 | தித்திக்கும் | இனிக்கும் |
| 10 | 2 | திரவியம் | பொருள், செல்வம் |

| அதிகாரம் | வசனம் | வார்த்தை | பொருள் |
|---|---|---|---|
| 10 | 15 | அரண் | பாதுகாப்பு |
| 10 | 17 | கண்டனை | தள்ளுதல், ரத்துசெய்தல், நிராகரித்தல் |
| 10 | 28 | அபேட்சை | எதிர்பார்ப்பு, ஆசை |
| 11 | 1 | சுமுத்திரை | சரியான அளவு |
| 11 | 1 | கள்ளத்தராசு | சரியில்லாத அளவு |
| 11 | 3 | மாறுபாடு | வேறுபாடு, வித்தியாசம் |
| 11 | 8 | இக்கட்டு | துன்பம், கஷ்டம் |
| 11 | 9 | மாயக்காரன் | தந்திரம் செய்கிறவன், ஏமாற்றுகிறவன் |
| 11 | 15 | பிணைப்படுதல் | ஜாமீன், உத்திரவாதி |
| 11 | 18 | விருதாவேலை | வீண் வேலை |
| 11 | 16 | மானம் | மதிப்பு, மரியாதை |
| 11 | 17 | கடூரன் | கொடுமைக்காரன் |
| 11 | 21 | துஷ்டன் | பொல்லாதவன் |
| 11 | 24 | பிசினித்தனம் | கஞ்சத்தனம் |
| 11 | 26 | உதாரகுணம் | தாராளமாய் கொடுத்தல் |
| 11 | 28 | துளிர் | மரம், புதிய இலை முளைத்தல் |
| 11 | 28 | தழைத்தல் | செழிப்பு, வளர்ச்சி |
| 12 | 2 | துர்ச்சிந்தனை | தீமையான, கெட்ட எண்ணங்கள் |
| 12 | 4 | குணசாலி | நல்லகுணம் உள்ளவர்கள் |
| 12 | 4 | எலும்புருக்கி | ஒருவியாதி, சயரோகம்(காசநோய்) |
| 12 | 5 | சூதானவை | வஞ்சனை, தந்திரம் |
| 12 | 6 | பதிவிருத்தல் | மறைந்திருத்தல் |
| 12 | 8 | இகழ்ச்சி | அவமானம் |
| 12 | 18 | ஔஷதம் | மருந்து, சுகம், ஆரோக்கியம் |
| 12 | 23 | பிரசித்தம் | விளம்பரம், பரப்புதல், அறிவிப்பு |
| 12 | 24 | ஜாக்கிரதை | கவனம், எச்சரிப்பு |
| 12 | 24 | பகுதி | வரி, பங்கு |
| 12 | 25 | ஒடுக்கும் | தாழ்த்தும் |
| 13 | 4 | புஷ்டி | கொழுப்பு |
| 13 | 11 | கைப்பாடு | தொழில், வேலை |
| 13 | 17 | தீது | தீமை |
| 13 | 17 | துரோகமுள்ள தூதன் | கெட்ட (துஷ்ட) செய்தியை எடுத்துச் செல்பவர் |
| 14 | 2 | தாறுமாறு | குழப்பம், ஒழுங்கு இல்லாத |
| 14 | 3 | மிலாறு | சவுக்கு, சாட்டை |
| 14 | 4 | வரத்து | வரவு, வருமானம் |
| 14 | 13 | சஞ்சலம் | வருத்தம் |
| 14 | 14 | பின்வாங்கும் இருதயம் | பின்வாங்குகிறவன், விசுவாசமற்றவன் |
| 14 | 27 | கண்ணி | சுருக்கு, வலை |
| 14 | 28 | ஜனத்திரட்சி | மக்கள் கூட்டம் |

| அதிகாரம் | வசனம் | வார்த்தை | பொருள் |
|---|---|---|---|
| 14 | 35 | பணிவிடைக்காரன் | வேலைக்காரன் |
| 15 | 5 | விவேகி | பகுத்தறிவு, புத்தி, ஆராய்ச்சி |
| 15 | 7 | இறைக்கும் | பரப்புதல் |
| 15 | 11 | பிரத்தியட்சம் | காட்சி, தரிசனம் பார்க்கக்கூடிய |
| 15 | 14 | மதியீனம் | அறிவு இல்லாத |
| 15 | 15 | மனரம்மியம் | மனதிருப்தி |
| 15 | 17 | கறி | இறைச்சி, மாமிசம் |
| 15 | 17 | இலைக்கறி | கீரை |
| 15 | 22 | சித்தியாமற்போம் | வெற்றிபெறாது, நடக்காது, நிறை வேறாது |
| 16 | 2 | நிறுத்துப்பார்த்தல் | ஒப்பிட்டுப்பார்த்தல் |
| 16 | 6 | நிவிர்த்தியாதல் | சரியாகுதல், பிராயச்சித்தம் செய்தல் |
| 16 | 10 | திவ்வியவாக்கு | தேவ வார்த்தை, இனிய வார்த்தை, கட்டளை |
| 16 | 11 | நிறைகல் | எடைக்கல், கிலோ கல் |
| 16 | 11 | நிறைகோல் | அளவுகோல், தராசு, ஸ்கேல் |
| 16 | 14 | மரணதுாதர் | மரணத்தை அறிவிப்பவன் |
| 16 | 29 | நயங்காட்டி | ஆசைகாட்டி |
| 17 | 1 | பதார்த்தம் | உணவுப்பொருள் |
| 17 | 1 | அமரிக்கை | அமைதி |
| 17 | 8 | பரிதானம் | லஞ்சம், கைக்கூலி |
| 17 | 10 | துருகம் | மலைக்கோட்டை, கோபுரம் |
| 17 | 11 | குரூரதுாதன் | கொடியவன், கெட்ட செய்தி சொல்பவன் |
| 17 | 19 | வாதுப்பிரியன் | சண்டை, தர்க்கம் செய்கிறவன் |
| 17 | 26 | தண்டம் | தண்டனை, அபராதம் |
| 18 | 5 | முகதாட்சிணியம் | பட்சபாதம், முகம் பார்த்து செயல்படுதல் |
| 18 | 8 | தைக்கும் | குத்துதல் (முள்) |
| 18 | 24 | சொந்தம் | தொடர்பு, நட்பு |
| 19 | 1 | வாசி | அதிகம் நல்லது, நியாயம் |
| 19 | 2 | துரிதமானவன் | அவசரமாய் செய்பவன் / செல்பவன் |
| 19 | 3 | தாங்கல் | மனக்குறை, கஷ்டம் (பாரம்) |
| 19 | 4 | நெகிழப்படுவான் | கைவிடப்படுவான் |
| 19 | 14 | ஈவு | அன்பளிப்பு, வரம் |
| 19 | 18 | சிட்சை | தண்டனை, அறிவுரை |
| 19 | 19 | கடுங்கோபி | அதிகம் கோபப்படுகிறவன் |
| 19 | 19 | ஆக்கினை | தண்டனை |
| 19 | 20 | அந்திய காலம் | மரணக்காலம், கடைசிக்காலம், பிற்காலம் |
| 20 | 1 | அமளி | குழப்பம், கலகம் |
| 20 | 2 | உறுக்குதல் | மூர்க்கம் |
| 20 | 5 | மொண்டு | எடுத்தல் |
| 20 | 9 | துப்புரவு | சுத்தம், துாய்மை |

| அதிகாரம் | வசனம் | வார்த்தை | பொருள் |
|---|---|---|---|
| 20 | 13 | ஆகாரம் | உணவு, சாப்பாடு |
| 20 | 14 | மெச்சிக்கொள்ளுதல் | புகழ்தல், பெருமைபாராட்டுதல் |
| 20 | 14 | கொள்ளுகிறவன் | வாங்குகிறவன் |
| 20 | 17 | வஞ்சனை | ஏமாற்றுகிறவன், பொய் |
| 20 | 17 | பருக்கைக்கல் | சிறு(பொடி) கல் |
| 20 | 19 | தூற்றுதல் | கோள் சொல்லுதல், பரவச்செய்தல் |
| 20 | 19 | அலப்புதல் | குழப்புதல், வீண்பேச்சு |
| 20 | 27 | தீபம் | விளக்கு |
| 21 | 1 | நீர்க்கால் | தண்ணீர்க்கால்வாய் |
| 21 | 4 | மேட்டிமை | கர்வம், அகந்தை |
| | 4 | வெளிச்சம் | பளிச்சென்று காணப்படும் (மேட்டிமையான பார்வை, இறுமாப்புக் கொண்ட உள்ளம், இவை பொல்லாரிடம் பளிச்சென்று காணப்படும் பாவங்கள்) |
| 21 | 7 | பாழ்க்கடித்தல் | பாழாக்குதல், அழித்தல், கெடுத்தல் |
| 21 | 8 | கிரியை | செயல் |
| 21 | 14 | அந்தரங்கம் | இரகசியம் |
| 21 | 14 | வெகுமதி | பரிசு, அன்பளிப்பு |
| 21 | 14 | குரோதம் | மறைவான கோபம் |
| 21 | 14 | ஆற்றும் | அமைதி |
| 21 | 16 | தாபரிப்பான் | தங்குவான் குடியிருப்பான் |
| 21 | 24 | இடும்பு | பெருமை, தப்பு, துன்பம் |
| 21 | 29 | நேர்ப்படுத்துதல் | சரிப்படுத்துதல், திருத்துதல் |
| 21 | 31 | ஜெயம் | வெற்றி |
| 21 | 1 | நற்கீர்த்தி | நல்லபெயர், புகழ் |
| 22 | 1 | தயை | இரக்கம், கருணை |
| 22 | 2 | தரித்திரன் | ஏழை |
| 22 | 3 | நெடுக | நீண்ட, செல்லுதல், நேராக |
| 22 | 9 | கருணைக்கண்ணன் | இரக்ககுணம் உள்ளவன் |
| 22 | 10 | வாது | சண்டை, தர்க்கம் |
| 22 | 20 | யதார்த்தம் | நீதி, உண்மை, சரியான |
| 22 | 22 | நியாயஸ்தலம் | நீதிமன்றம் |
| 22 | 24 | உக்கிரம் | கடுங்கோபம் |
| 22 | 4 | பிரயாசம் | உழைப்பு |
| 23 | 5 | ஆகாயமார்க்கம் | வான்வழி,விண்வெளி |
| 23 | 6 | வன்கண்ணன் | பொல்லாத கண்ணை உடையவன், பொறாமை உடையவன் |
| 23 | 8 | துணிக்கை | உணவுதுண்டு, பருக்கை |

| அதிகாரம் | வசனம் | வார்த்தை | பொருள் |
|---|---|---|---|
| 23 | 10 | பூர்வம் | பழைய, முன்பு |
| 23 | 13 | சாகான் | மரணம் அடையான் |
| 23 | 16 | உள்ளிந்திரியம் | மனம், உள்மனம் |
| 23 | 27 | இடுக்கம் | நெருக்கம் |
| 23 | 31 | இரத்தவருணம் | சிவப்பு நிறம் |
| 23 | 35 | சுரணை | உணர்ச்சி உணர்வு |
| 24 | 2 | தீவினை | கொடுமை, பாவம் |
| 24 | 6 | ஆலோசனைக்காரர் | ஆலோசனை கூறுபவர் |
| 24 | 8 | உபாயஞ்செய்கிறவன் | தந்திரக்காரன், ஏமாற்றுகிறவன் |
| 24 | 19 | எரிச்சலாகாதே | கோபங்கொள்ளாதே |
| 24 | 23 | முகதாட்சண்யம் | ஓரவஞ்சனை |
| 24 | 24 | பிரஜைகள் | மக்கள் |
| 24 | 27 | எத்தனம் | ஆயத்தம், ஒழுங்கு, முயற்சி |
| 24 | 31 | காஞ்சொறி | ஒருமுள் செடி |
| 25 | 1 | பேர்த்தெழுதின | தொகுத்தல், சேகரித்தல் |
| 25 | 4 | களிம்பு | துரு, அழுக்கு |
| 25 | 4 | தட்டான் | தங்க ஆசாரி |
| 25 | 4 | உடைமை | பொருள், பாத்திரம், சாமான் |
| 25 | 4 | பிறக்கும் | கிடைக்கும் |
| 25 | 5 | துஷ்டன் | துன்மார்க்கர் |
| 25 | 6 | ஸ்தானம் | இடம் |
| 25 | 8 | பதற்றம் | நடுக்கம் |
| 25 | 9 | வியாஜ்யம் | வழக்கு, குற்றச்சாட்டு, புகார் |
| 25 | 11 | பொற்பழம் | தங்கப்பழம் போல |
| 25 | 11 | சமானம் | இணை, உதாரணம், சமம் |
| 25 | 12 | பொற்கடுக்கன் | தங்க காதுவளையம் |
| 25 | 12 | அபரஞ்சி | சுத்த தங்கம் |
| 25 | 12 | பூஷணம் | நகை |
| 25 | 13 | உறைந்த மழை | பனிமழை |
| 25 | 16 | மட்(டு)டாய் | தேவையான அளவு |
| 25 | 16 | மிதமிஞ்சி | அளவுக்கு, தேவைக்கு அதிகம் |
| 25 | 17 | சலித்து | வெறுப்பு |
| 25 | 18 | தண்டாயுதம் | கைத்தடி, கோல் |
| 25 | 18 | கட்கம் | பட்டயம், வாள், கத்தி |
| 25 | 19 | மொழிபுரண்ட | மூட்டுவிலகுதல் |
| 25 | 22 | தழல் | நெருப்பு |
| 25 | 25 | விடாய்த்த | தாகம் |
| 25 | 26 | சுனை | நீர்ஊற்று |

| அதிகாரம் | வசனம் | வார்த்தை | பொருள் |
|---|---|---|---|
| 25 | 27 | தற்புகழ் | சுயபெருமை, தன்னைத்தானே புகழ்தல் |
| 26 | 1 | உஷ்ண காலம் | கோடைகாலம் |
| 26 | 1 | உறைந்த பனி | பனிக்கட்டி |
| 26 | 6 | தறித்தல் | வெட்டுதல் |
| 26 | 7 | குந்திக் குந்தி | குதித்து, குதித்து |
| 26 | 7 | உவமை | உதாரணம் |
| 26 | 8 | கவண் | கல் எறிய பயன்படும் கருவி |
| 26 | 15 | கலம் | தட்டு, பாத்திரம் |
| 26 | 17 | தனக்கடாத | தனக்கு அவசியமில்லாத |
| 26 | 18 | கொள்ளி | தீ எறியும் விறகு |
| 26 | 20 | அவியும் | அணையும் |
| 26 | 21 | கரி | விறகு / கரி |
| 26 | 21 | மூட்டுதல் | ஆரம்பித்தல் |
| 26 | 23 | நேச அனல் | அதிக அன்பு |
| 26 | 23 | ஓடு | உடைந்த மண்பானை |
| 26 | 24 | கபடம் | வஞ்சகம் |
| 26 | 24 | சூது | தந்திரம் |
| 26 | 28 | கிலேசம் | வருத்தம் |
| 27 | 2 | புறத்தியான் | அந்நியன் |
| 27 | 4 | நிஷ்டூரம் | கொடுமை |
| 27 | 4 | உக்கிரம் | கோபம் |
| 27 | 7 | தித்திப்பு | இனிப்பு |
| 27 | 7 | பதார்த்தம் | பலகாரம், உணவுப்பொருள் |
| 27 | 8 | ஸ்தானம் | இடம் |
| 27 | 9 | பரிமளதைலம் | வாசனை எண்ணெய் |
| 27 | 9 | சுகந்த தூபம் | வாசனைப்புகை |
| 27 | 9 | களிப்பு | மகிழ்ச்சி |
| 27 | 12 | நேர் | நேராக |
| 27 | 15 | அடைமழை | இடைவிடாமல் பெய்யும் மழை |
| 27 | 21 | குகை, புடம் | உலைக்களம், நெருப்புப் பட்டறை, உலோகம் உருக்கும் பாத்திரம் |
| 27 | 26 | கடா | ஆண் ஆடுகள் |
| 27 | 26 | கிரயம் | விலை |
| 27 | 27 | பிழைப்பு | வாழ்க்கை |
| 28 | 2 | நற்சீர் | உறுதி, நிலை, ஒழுங்கு |
| 28 | 6 | திரியாவரக்காரன் | கபடன், வஞ்சகன் |
| 28 | 7 | புத்திரன் | மகன் |
| 28 | 8 | ஆஸ்தி | செல்வம், சொத்து |

| அதிகாரம் | வசனம் | வார்த்தை | பொருள் |
|---|---|---|---|
| 28 | 16 | தீர்க்காயுசு | நீண்ட ஆயுள் |
| 28 | 25 | பெருநெஞ்சன் | பெருமைக்காரன் |
| 28 | 25 | கொளுவுதல் | தூண்டுதல், மூட்டிவிடுதல், கிளப்புதல் |
| 28 | 27 | தாழ்ச்சி | குறைவு |
| 29 | 1 | பிடரி | கழுத்து |
| 29 | 1 | சடிதி | திடீரென்று |
| 29 | 1 | நாசம் | அழிவு |
| 29 | 3 | தொந்திப்பு | கூட்டு, உறவு, நட்பு |
| 29 | 15 | பிரம்பு | குச்சி, கம்பு |
| 29 | 21 | இளக்காரம் | மிருது, மென்மை |
| 29 | 27 | சன்மார்க்கன் | நேர்மையானவன் |
| 30 | 1 | புருஷன் | மனிதன் |
| 30 | 4 | நாமம் | பெயர் |
| 30 | 7 | மனு | விண்ணப்பம் |
| 30 | 8 | மாயை | வீண் |
| 30 | 8 | வசனிப்பு | பேச்சு |
| 30 | 9 | படி | அனுதின அடிப்படைதேவை |
| 30 | 12 | அழுக்கற | சுத்தம் |
| 30 | 13 | நெறிப்பு | கண் இமைகள் உயர்த்துதல் |
| 30 | 14 | கட்கம் | பட்டயம், வாள், கத்தி |
| 30 | 15 | குமாரத்தி | மகள் |
| 30 | 19 | கன்னி | குமாரி, பெண் |
| 30 | 23 | இல்லாள் | மனைவி |
| 30 | 23 | நாச்சியார் | எஜமாட்டி, முதலாளி அம்மா, முதல் மனைவி |
| 30 | 25 | அற்பமான | எளிய, பலவீனம், சாதாரணம் |
| 30 | 25 | ஜெந்து | பிராணி |
| 30 | 26 | சத்துவமற்ற | பலம் இல்லாத, பலவீனம் |
| 30 | 26 | கன்மலை | மலை, பாறை, குன்று |
| 30 | 27 | பவுஞ்சு | படை, கூட்டம், சூழ |
| 30 | 29 | விநோதம் | அழகு, அதிசயம், விளையாட்டு |
| 30 | 30 | சவுரியம் | பலம், வல்லமை |
| 30 | 32 | துர்ச்சிந்தனை | கெட்ட நினைவு |
| 31 | 1 | போதித்தல் | கற்றுக்கொடுத்தல் |
| 31 | 2 | பொருத்தனை | நேர்ச்சை |
| 31 | 3 | ஸ்திரீ | பெண் |
| 31 | 8 | திக்கற்றவன் | அனாதை, கைவிடப்பட்டவன் |
| 31 | 10 | குணசாலி | நல்லகுணம் உள்ளவள் |

| அதிகாரம் | வசனம் | வார்த்தை | பொருள் |
|---|---|---|---|
| 31 | 15 | படியளத்தல் | அனுதின தேவைகளைக் கொடுத்தல் |
| 31 | 16 | சம்பாத்தியம் | வருமானம், சம்பளம், சேமிப்பு |
| 31 | 17 | இடை | இடுப்பு |
| 31 | 19 | இராட்டினம் | இராட்டை |
| 31 | 21 | இரட்டைப்புரை | 2 மடிப்பு உடை |
| 31 | 23 | மூப்பர்கள் | பெரியவர்கள் |
| 31 | 23 | நியாயஸ்தலம் | நீதிமன்றம் |
| 31 | 24 | வர்த்தகம் | வியாபாரம் |
| 31 | 27 | கண்ணோக்கம் | கவனம் |
| 31 | 28 | பாக்கியவதி | ஆசீர்வதிக்கப்பட்டவள் |
| 31 | 30 | சௌந்தர்யம் | அழகு |

தொகுப்பு : பாஸ்டர் S.K. ஞானமுத்து ( சூலூர்)
உதவி : பின் தொடர்பணி அலுவலகப் பணியாளர்கள்

☞ நீதிமொழிகள் புத்தகத்தை நீங்கள் வாசித்திருக்கிறீர்களா?

☞ விளங்கும் வகையில் வாசிப்பீர்களா?

☞ இந்திய வேதாகம சங்கத்தார் வெளியிட்டுள்ள 'வெற்றி வாழ்விற்கான நீதிமொழிகள்' என்ற புதிய தமிழ் மொழிபெயர்ப்பு புத்தகம் உண்டு. இது வாசிப்பதற்கு இனிமையாகவும் விளங்கிக் கொள்வதற்கும் உதவியாக இருக்கும். தேவையானால் எங்களுக்கு எழுதுங்கள். ( அல்லது கீழ்க்காணும் விலாசத்திற்கு எழுதுங்கள்)

☞ இந்திய வேதாகமச் சங்கம் 206 மகாத்மா காந்தி ரோடு,
பெங்களூர் - 560 001.

☞ இந்திய வேதாகம சங்கம், பூங்கா நகர் சென்னை 600 003.

பழைய ஏற்பாட்டின் புத்தக வரிசையில் 21 ஆவது புத்தகமாக பிரசங்கி இடம் பெற்றிருக்கிறது. 'எக்ளிசியாஸ்டிஸ்' என்று ஆங்கிலத்தில் அழைக்கப்படும் இப்புத்தகத் தலைப்பின் பொருள் 'பிரசங்கம் செய்பவர்' (அருளுரையாளர்) என்பதாகும். 'எக்ளீசியா' என்றால் 'சபை' என்று பொருள்.

## இப்புத்தகத்தைப் பற்றி

வேதாகமத்திலேயே தத்துவ நடையில் கேள்விகளை எழுப்பி சிந்தனையைத் தூண்டக்கூடிய ஓர் சிறப்பான புத்தகமாகும். நிறைவான, நிலையான, நித்தியமானவைகளைப் பற்றி எழும் ஏக்கத்தை இப்புத்தகம் வெளிப்படுத்துகிறது. இப்புத்தகத்தில் எழுதப்பட்டிருக்கும் கேள்விகள், தர்க்கங்கள், கண்ணோட்டங்கள் நம்முடைய மனதைக் கலக்குவது போல் தோன்றினாலும் தேவன் மட்டுமே நிலையான நிறைவைக் கொடுக்கமுடியும் என்ற பதிலை இப்புத்தகத்தின் செய்தி விளக்குகிறது.

## வரலாற்றுப் பின்னணி

இஸ்ரவேலை அரசாண்ட மூன்றாவது மன்னனாகிய சாலொமோன் ஒரு மாமன்னன். அவன் சிறந்த ஓர் ஞானி. தாவீது மன்னனின் மகன். எருசலேமில் தேவாலயத்தைக் கட்டினவன். செல்வச் செழிப்போடு வாழ்ந்தவன். வாழ்க்கை அனுபவங்களில் கரை கண்டவன். சாலொமோன் வாலிப வயதில் உன்னதப்பாட்டையும் நடுவயதில் நீதிமொழிகளையும் முதிர்ந்த வயதில் பிரசங்கியின் புத்தகத்தையும் எழுதினான். பிரசங்கியில் 1:1,2,16; 2 : 9 வசனங்களைப் பாருங்கள்.

## ஏன் இப்புத்தகம் எழுதப்பட்டது?

இவ்வுலகத்தின் ஆசாபாசங்கள், அனுபவங்கள், நிலையற்றவை. அவைகள் மனித உள்ளத்தின் ஆழமான தேவைகளை நிறைவுபடுத்த முடியாது என்பதை எல்லோரும் அறிந்திருக்க வேண்டும்.

**எழுதியவர் :** சாலொமோன் அரசன்

**எழுதப்பட்ட காலம் :**
சுமார் கி.மு. 935

## முக்கியச் செய்தி:

மனிதத் திறமை, ஞானம், உலக செல்வங்கள், முயற்சிகள், செல்வாக்கு, சிற்றின்பங்கள் இவைகள்அத்தனையும் சேர்ந்தும் மனிதனுடைய ஆன்மீக தேவைகளை சந்திக்க முடியாது. தேவன் இடம் பெறாத , ஆண்டு நடத்தாத மனித வாழ்க்கை சீரழிவும், சஞ்சலமும், வேதனையும், தவிப்பும் வெறுமையும், வீணுமாய் பயனற்றிருக்கும். 'மாயை' என்ற வார்த்தை இப்புத்தகத்தில் பலமுறை வருவதைக் கவனியுங்கள். 'சூரியனுக்குக் கீழே' என்ற சொற்றொடரின் பொருள் 'இவ்வுலக வாழ்க்கை' என்பதாகும். சாலொமோன் அரசனின் தனிப்பட்ட அனுபவங்களை விளக்கும் வார்த்தைகளைக் கவனியுங்கள். உதாரணமாக கண்டேன், மனதைப் பிரயோகம் பண்ணினேன், சம்பாதித்தேன். இப்புத்தகத்தில் அறிவுரைகளும், தத்துவங்களும், ஆலோசனைகளும், எச்சரிப்புகளும் எழுதப்பட்டிருக்கின்றன.

## முக்கிய குறிப்புகள், புள்ளி விவரங்கள்

பெரிய அதிகாரம் 7 (29 வசனங்கள்)
சிறிய அதிகாரம் 11 (10 வசனங்கள்)

(1)

**பகுப்பாய்வு**

'எல்லாம் மாயை' 1:1 - 11

வீணான வாழ்க்கை: சான்றுகள் 1:12 - 6:12

தேவனுக்கு பயந்திருக்க ஆலோசனை 7:1 - 12:14

**முக்கிய அதிகாரம் : 12**

**திறவுகோல் வசனங்கள்:**

2: 24; 2: 13, 14

(2:24) மனுஷன் புசித்துக் குடித்து, தன் பிரயாசத்தின் பலனை அநுபவிப்பதைப் பார்க்கிலும், அவனுக்கு ஒரு நன்மையும் இல்லை; இதுவும் தேவனுடைய கரத்திலிருந்து வருகிறது என்று நான் கண்டேன்.

(2:13) இருளைப் பார்க்கிலும் வெளிச்சம் எவ்வளவு உத்தமமோ, அவ்வளவாய் மதியீனத்தைப் பார்க்கிலும் ஞானம் உத்தமமென்று கண்டேன்.

(2:14) ஞானியின் கண்கள் அவன் முகத்திலே இருக்கிறது; மூடனோ இருளிலே நடக்கிறான்; ஆகிலும் அவர்களெல்லாருக்கும் ஒரே விதமாய்ச் சம்பவிக்கிறது என்று கண்டேன்.

**முக்கிய வார்த்தை:** மாயை

இந்த வார்த்தையின் பொருள் நிலையில்லாதது. நிழலைப் போன்றது. வீணானது, வெளிவேஷமானது.

| | |
|---|---|
| மாயை | 34 |
| சூரியனுக்குக் கீழே | 28 |
| வேதனையைக் குறிக்கும் வார்த்தைகள் (தொல்லை, சஞ்சலம், தவிப்பு) | 23 |
| ஞானம் | 32 |
| இருதயம் | 16 |

**கண்டுபிடியுங்கள்**

1. கீழ்க்காணும் வசனங்களில் நீங்கள் கண்டறியும் உண்மை என்ன?
   1:13, 2:24, 3:10,11, 14, 17, 18, 5:6,19, 20 6:2, 6, 7:14, 29, 8:15, 17, 9:7, 9, 11:9, 12:14
2. உங்களுடைய தனிப்பட்ட வாழ்க்கைக்கான கருத்துக்கள் ஏதேனும் இப்புத்தகத்தில் உண்டா?
3. கட்டளையான வார்த்தைகள் 20 இடங்களுக்கு மேல் வருகின்றன. கண்டுபிடியுங்கள்.

**சிந்தியுங்கள்**

- வாழ்க்கையின் பொருள் என்ன?
- பணம், பதவி, பட்டம், அந்தஸ்து, செல்வாக்கு என்பவைகளின் மதிப்பு என்ன?

**ஒவ்வொரு அதிகாரத்தின் உள்ளடக்கம்**

ஒவ்வொரு அதிகாரத்தின் செய்தியையும் குறிப்பாக நீங்கள் அறிந்துகொள்ளவும், எளிதாக விளங்கிக் கொள்ளவும், தெளிவாக உங்கள் நினைவில் வைத்துக்கொள்ளவும் பின்வரும் தலைப்புகள் பெரிதும் உதவும். அந்தத் தலைப்புகளை உங்கள் வேதாகமத்தின் ஒவ்வொரு அதிகாரத்தின் ஆரம்பத்திலும் எழுதி வைத்துக் கொள்ளுங்கள். அதை மனப்பாடமாக படித்துக்கொள்ளுங்கள். ஏன் இந்தத் தலைப்புகள் கொடுக்கப்பட்டிருக்கின்றன என்று யோசித்துப்பாருங்கள்.

பிரசங்கி புத்தகத்தை 4 நாட்களில் வாசித்து முடிக்க ஓர் அட்டவணை

| நாள் | அதிகாரங்கள் |
|---|---|
| 1 | 1-3 |
| 2 | 4-6 |
| 3 | 7-9 |
| 4 | 10-12 |

1. எல்லாம் மாயை, புதியது ஒன்றுமில்லை. வாழ்க்கையின் சுழற்சிகள், ஞானத்தினால் பயன் இல்லை.
2. இன்பமும், செல்வமும், முயற்சிகளும் மாயையே; வாழ்க்கை அனுபவங்கள் மூலம் கண்டறிந்தவை.
3. ஒவ்வொன்றிற்கும் ஒரு காலமுண்டு! தேவன் என்ன செய்கிறார்? மனிதனும் மிருகமும்.
4. அநியாயத்தின் கொடுமை. ஐக்கியத்தின் மேன்மை.
5. சில பாவங்களைக் குறித்த எச்சரிப்புகள். செல்வம் நிலையற்றது.
6. விருப்பங்கள், பிள்ளைகள், முயற்சிகள் எல்லாம் மாயை.
7. எது நல்லது? பலவிதமான அறிவுரைகள்.
8. அதிகாரத்திற்கு அடிபணிதல். துன்மார்க்கருக்கு நியாயத்தீர்ப்பு.
9. தேவனுடைய தீர்ப்புக்கு யாரும் தப்ப முடியாது! அனுமதியின்படி அனுபவிக்கலாம்.
10. மதியீனத்தின் விளைவுகள். ஞானத்தின் நன்மைகள்.
11. உதாரத்துவ செயல்கள். வாலிபத்தின் மாயை.
12. வாலிபப்பிராயத்தில் உன் சிருஷ்டிகரை நினை. முடிவுரை: ஞானியின் வார்த்தைகள்.

## இப்புத்தகத்தை வாசிப்பதற்கான ஆலோசனை

பிரசங்கியின் 12 அதிகாரங்கள் (222 வசனங்கள்) தமிழ் வேதாகமத்தில் 10 பக்கங்களில் அடங்கியுள்ளன. 45 நிமிடங்களில் இப்புத்தகம் முழுவதையும் வாசித்துவிடலாம். அப்படி ஒருமுறை வாசித்துப் பாருங்கள்.

வேதாகமத்தில் பழைய ஏற்பாட்டின் புத்தக வரிசையில் 22 ஆவது புத்தகமாக இடம் பெற்றிருக்கும் இப்புத்தகம் ஒரு காதல் காவியமாகும். மணவாளன் மணவாட்டிக்கிடையே உள்ள அன்பு, இப்புத்தகத்தில் பல வர்ணனைகளுடன் விளக்கப் பட்டிருக்கிறது.

## இப்புத்தகத்தைப் பற்றி

உன்னதப்பாட்டு அதாவது 'பாடல்களில் எல்லாம் தலை சிறந்த பாடல்' என்பது இப்புத்தகத் தலைப்பின் பொருளாகும். சாலொமோனின் பாடல் என்றும் அழைக்கப்படுகிறது.

நாடக உரையாடல் போல வெவ்வேறு காட்சி பின்னணிகளுடன் இப்புத்தகம் எழுதப்பட்டிருக்கிறது. உண்மையான, ஆழமான அன்பின் கவர்ச்சியும், தூய்மையும், வலிமையும் பல விதங்களில் விவரிக்கும் வார்த்தைகளால் விளக்கப்பட்டிருக்கிறது.

பின்னணி : Mr. H.R. IRONSIDE என்பவர் கொடுக்கும் விளக்கம் *Taken from Unger's Bible Hand book.*

சாலொமோன் ராஜாவிற்கு எப்பிராயீம் மலை நாட்டில் திராட்சைத் தோட்டம் ஒன்று இருந்தது. அதைக் கவனித்து வந்த குடும்பத்திலிருந்த ஆடு மேய்க்கும் ஒரு பெண்மணி தான் சூலேமித்தியாள்.

ஒரு நாள் சாலோமோன் ராஜா அந்த தோட்டத்திற்கு வருகிறார். அவர் ஒரு மேய்ப்பன் என்று அவள் நினைக்கிறாள். அவளோடு அவர் கனிவுடன் பட்சமாய் பேசுகிறார். அவர்களுக்கிடையே அன்பு உருவாகிறது. மீண்டும் சந்திப்பேன் என்று வாக்குறுதி கொடுத்து செல்கிறார். அவரைக் காணவேண்டும் என்ற ஏக்கத்தோடு அவள் காத்திருக்கிறாள்.

(1)

அதிகாரம் 3 இல் எழுதப்பட்டிருப்பது கனவு என்று சொல்லப்படுகிறது. ராஜா மீண்டும் வருகிறார். அவளைப் பாராட்டுகிறார். அவளை தன் மணவாட்டியாக்கிக் கொள்கிறார்.

**எழுதியவர்:** சாலொமோன்

**எழுதப்பட்ட காலம்:** சுமார் கி.மு. 970

## எழுதப்பட்ட நோக்கம்

1. தேவனால் நியமிக்கப்பட்ட திருமண உறவின் மேன்மையை விளக்கிக் காட்ட
2. தேவனுக்கும் அவருடைய மக்களுக்கும் உள்ள உறவையும் அன்பையும் எடுத்துக்காட்ட

## முக்கியச் செய்தி

தேவனுக்கும் அவருடைய மக்களாகிய இஸ்ரவேலருக்கும் உள்ள அன்பின் உறவு பல கோணங்களில் விவரிக்கப்பட்டிருக்கிறது. புதிய ஏற்பாட்டில் ஆண்டவராகிய இயேசு கிறிஸ்துவுக்கும் அவருடைய மணவாட்டியாகிய திருச்சபைக்கும் உள்ள ஆழமான அன்பின் உறவிற்கு இப்புத்தகம் சிறந்த மாதிரி போதனையாக (TYPE) இருக்கிறது. ஓசியா 2:19, 20, சங்கீதம் 45: 1, 2,11, எபேசியர் 5:22- 33. வெளி 19: 7-9.

## முக்கிய குறிப்புகள், புள்ளி விவரங்கள்

21 வகையான தாவரங்கள்,

15 வகையான விலங்குகள்.

15 இடங்கள் இப்புத்தகத்தில் எழுதப் பட்டிருக்கின்றன. 7 இடங்களில் சாலொமோன் பெயர் வருகிறது.

## முக்கிய கதா பாத்திரங்கள்

சாலொமோன் ராஜா

சூலேமித்தியாள், எருசலேம் குமாரத்திகள்

## பகுப்பாய்வு

| | |
|---|---|
| அன்பு கொள்ளுதல் | 1-3 |
| அன்பின் ஆழமான பிணைப்பு | 4 |
| அன்பின் சிக்கல் | 5 -6 |
| அன்பின் அர்ப்பணிப்பு | 7, 8 |

## இப்புத்தகத்தை வாசிப்பதற்கான ஆலோசனை

உன்னதப்பாட்டு 8 அதிகாரங்கள் (117 வசனங்கள்) வேதாகமத்தின் 6பக்கங்களில் அமைந்திருக்கின்றன. 20 நிமிடங்களில் இப்புத்தகம் முழுவதையும் வாசித்து விடலாம். அப்படி ஒரு முறை வாய்விட்டு வாசித்துப் பாருங்கள்.

உன்னதப்பாட்டு புத்தகத்தை 3 நாட்களில் வாசித்து முடிக்க ஓர் அட்டவணை

| நாள் | அதிகாரங்கள் |
|---|---|
| 1 | 1-3 |
| 2 | 4-6 |
| 3 | 7-8 |